பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 9 புதன்கிழமை (25-09-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:302

## பலாலி நோக்கி வந்த விமானத்தில் கோளாறு!

### விமானியின் சாதுரியத்தால் தப்பியது

கொழும்பு,செப்.25

இரத்மலானை விமான நிலையத்திலிருந்து நேற்று வடக்கே பலாலி நோக்கி பறந்து கொண்டிருந்த 'அன்ரனோவ்' ரக விமானம் ஒன்றில் திடீரென இயந்திரக்கோளாறு ஏற்பட்டது.

படையினருக்கான பொருள்களை ஏற்றிச்சென்ற இந்த விமானம் பலாலி விமான நிலையத்தை நெருங்கிக் கொண்டிருந்த சமயம் அதில் கோளாறு ஏற்பட்டது என்றும் -

எனினும், விமானி சாதுரியமாக வேகமாகச் செலுத்திச் சென்று பலாலி தளத்தில் தரையிறக்கி விட்டார் எனவும் -

தெரிவிக்கப்பட்டது.

விமானியின் சாதுரியத்தால் பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-12)

## நெடுந்தீவில் முகாம் அமைக்கும் முயற்சியை கடற்படை கைவிட்டது!

### கண்காணிப்புக் குழுவின் தலையீட்டை அடுத்து

நெடுந்தீவு,செப்.25

நெடுந்தீவில் பாரிய கடற்படை முகாம் ஒன்றை அமைக்கும் வேலையைக் கைவிட்டு அங்கு தரையிறங்கிய கடற்படையினர் நேற்று நண்பகல் அங்கிருந்து வெளியேறினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குப் பின்புறமாக பாரிய கடற்படை முகாம் ஒன்றை அமைக்கும் நோக்குடன் ஐம்பதுக்கும் மேற்பட்ட கடற்படையினர் தரையிறங்கு கலம் மூலம் நேற்றுமுன்தினம் அங்கு தரையிறக்கப்பட்டனர்.

போர்நிறுத்த உடன்படிக்கையை அப்பட்டமாக மீறி, கடற்படையினர் அங்கு புதிதாக முகாம் நிறுவுவதை ஆட்சேபித்து விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் நேற்று முறையிட்டிருந்தனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரிகள் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்புகொண்டு கலந்துரை

(14 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். - கண்டி வீதியை முழுநாளும் திறக்கும் திட்டம் இன்று அமுலாகாது!

## நடைமுறைச் சிக்கல்கள் என்கிறது படைத் தரப்பு

கொழும்பு,செப்ரெம்பர்25

**சில நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக ஏ-9 யாழ். - கண்டி வீதியை 24 மணிநேரமும் வாகனப் போக்குவரத்துக்குத் திறந்துவைப்பதில் சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாக பாதுகாப்புப் படை அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.**

இந்த வீதியை 24 மணி நேரம் திறந்து வைத்திருக்க முடியுமா என்பது குறித்து நேற்றுமுன்தினம் வன்னி இராணுவத் தலைமையகத்தில் விசேட கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இக் கூட்டத்தில் கலந்துகொண்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாடு முழுவதும் நாளை திலீபன் நினைவு நிகழ்வுகள்

### 3 இடங்களில் மக்கள் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம்,செப்.25

உண்ணாநோன்பிருந்து தன்னுயிரை விடுதலைப் போருக்கு ஆகுதியாக்கிய தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 15 ஆவது நினைவு தினமான நாளை குடாநாட்டில் உண்ணாவிரதம், பொதுக் கூட்டம், எழுச்சி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

கடந்த 15 ஆம் திகதிமுதல் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிகழ்வுகளின் இறுதிநாள் நிகழ்வுகள் நாளை பல பகுதிகளிலும் இடம்பெறும்.

தீவகத்தில் புளியங்கூடல் அம்மன் கோயில் முன்றிலிலும் -

வடமராட்சியில் மாலுசந்திப் பிள்ளையார் கோயில் முன்றிலிலும் -

வலிகாமத்தில் திலீபன் உண்ணாவிரதம் இருந்த நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதியிலும் -

உண்ணா விரதங்கள் இடம்பெறவுள்ளன. உண்ணாவிரதத்தை அடுத்து அங்கு பொதுக் கூட்டங்களும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

ஆறு வருட இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### தலைநகரில் இப்படியும் சம்பவம்

## கைது செய்யப்படுவதை தவிர்ப்பதற்காக தற்கொலைத் தாக்குதல் நடத்திய இருவர்

### அவர்கள் பலி! பொலீஸார் உட்பட 9பேர் காயம்!!

சிறையிலிருந்து தப்பிய ஒரு கைதியையும், படையிலிருந்து தப்பிய சந்தேக நபர் ஒருவரையும் கைதுசெய்ய பொலீஸார் முயன்றபோது அவர்கள் இருவரும் குண்டுகளை வெடிக்க வைத்து தற்கொலைத் தாக்குதல் நடத்தினர். இச்சம்பவத்தில் அவர்கள் இருவரும் உயிரிழந்தனர்; மூன்று பொலீஸார் மற்றும் ஒரு பெண் உட்பட ஒன்பது பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு கடவத்தை பன்சல என்னும் இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது. ரங்க பண்டார என்ற பிரபல குற்றச் சந்தேகநபர் ஒருவர் பல்வேறு குற்றச் சம்பவங்கள் தொடர்பாக சிறை வைக்கப்பட்டிருந்தார். நேற்றுமுன்தினம் அதிகாலை இச்சந்தேகநபர் சிறையிலிருந்து தப்பினார்.

விசேட அதிரடிப்படையிலிருந்து தப்பிவந்து தலைமறைவாகத் திரிந்த தம்மி இந்திகா என்ற நபரும், சிறையிலிருந்து தப்பிய ரங்க பண்டாரவும் கடவத்தைப் பகுதியில் பதுங்கியிருந்து புதிய குற்றச்செயல் ஒன்றுக்குத் திட்டமிடுவதாகப் பொலீஸாருக்குத் தகவல் கிடைத்தது என்று கூறப்படுகிறது.

இதையடுத்து அவர்கள் பதுங்கியிருந்த இடத்தை பொலீஸார் நேற்றுமுன்தினம் இரவு முற்றுகையிட்டனர்.

அவ்வேளையிலேயே சந்தேக நபர்கள் குண்டுகளை வெடிக்க வைத்து தற்கொலைத் தாக்குதல் நடத்தியதாக கடவத்தைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

காயமடைந்த பொலீஸாரில் இருவர் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

## 14 நாள்களாகத் 'தலை' இல்லாதிருக்கும் இலங்கைப் பொலீஸ் திணைக்களம்!

கொழும்பு,செப்.25

கடந்த 14 நாள்களாக பொலீஸ்மா அதிபர் ஒருவரின்றி பொலீஸ் திணைக்களம் இருந்து வருகிறது. புதிய பொலீஸ்மா அதிபர் எப்போது நியமிக்கப்படுவார் என்பதும் இதுவரை தெரியவில்லை.

இதனால் அவசர நிலைமை ஒன்று ஏற்பட்டால் உத்தரவுகள் வழங்குவது யார் என்பது குறித்து சிக்கல் ஏற்படலாம் எனப் பொலீஸ் தலைமையக வட்டாரங்கள் கூறுகின்றன.

பொலீஸ்மா அதிபராக இருந்த லக்கி கொடித்துவக்கு காலமானதையடுத்து ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி முதல் 14 நாள்களுக்குப் பதில் பொலீஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார். அந்த 14 நாள் கால எல்லை, கடந்த 10ஆம் திகதியுடன் முடிவுற்

(14 ஆம் பக்கம் பார்க்க)



அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியில் போராளிகள் - படையினர்.

## போராளிகள் சென்ற வாகனம் அல்லைப்பிட்டியில் தடுத்துவைப்பு!

### புலிகள் கடும் ஆட்சேபம்

யாழ்ப்பாணம்,செப்.25

தீவகத்தில் அரசியல் பணிகளில ஈடுபடுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று மாலை அங்கு சென்ற போராளிகள் அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் நீண்ட நேரம் தாமதிக்க வைத்து அவமானப்படுத்தப்பட்டனர் என்றும் விடுதலைப் புலிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசி

(14 ஆம் பக்கம் பார்க்க)

பெற்றோர்களே! வடக்கு - கிழக்கில் போலியோ மறைந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது! மறந்துவிடாதீர்கள்!!

Sow the Seeds of Love

உங்கள் குழந்தையை போலியோ பிடிக்காமல் இருக்க எதிர்வரும் சனியன்று (28-09-2002) தவறாது போலியோ தடுப்பு சொட்டுமருந்து கொடுங்கள்!

PolioPlus

Rotary International

- யாழ்.றோட்டறிக் கழகம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# 200 பெண் புலிகள் உட்பட 304 பேர் 5 பஸ்களில் நேற்று வன்னி பயணம்!

## செங்கலடிப்பாலத்தில் இராணுவம் பொறுப்பேற்று பாதுகாப்பு வழங்கியது!!

மட்டக்களப்பிலிருந்து சுமார் 200 பெண் போராளிகள் உட்பட விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் 304 பேர் நேற்று காலை 8 மணியளவில் வன்னிக்குத் தரைமார்க்கமாக பயணத்தை மேற்கொண்டனர். மட்டக்களப்பு இலுப்படிச் சேனையிலிருந்து புறப்பட்ட இவர்களை செங்கலடி கறுத்த பாலத்தில் வைத்து இராணுவத்தினர் பொறுப்பேற்றனர்.

இவர்களை வழியனுப்பி வைப்பதற்காகப் புலிகளின் சிறப்புத் தளபதி ரமேஸ் விநோதன், படையணித் தளபதி தாத்தா ஆகியோர் சமுகம் அளித்திருந்தனர்.

இரண்டு 'டபிள்கப்' மற்றும் ஐந்து பஸ்களில் பயணம் மேற்கொள்ளும் புலிகளின் அணிக்கு புலிகளின் மட்டு. - அம்பாறை இராணுவத் தளபதி றொபர்ட் தலைமை தாங்கிச் சென்றார்.

இரண்டு கவசவாகனங்கள் உட்பட பெருந்தொகையான வாகனங்களில் இராணுவத்தினர் இவர்களுக்குப் பாதுகாப்பாகச் சென்றனர்.

ஒக்ரோபர் 10ஆம் திகதி பெண் போராளி மாலதியின் நினைவு தினமாகும். அன்றைய தினம் தமிழீழ பெணகள் எழுச்சி தினமாகவும் அனுஷ்டிக்கப்படுகிறது. வன்னியில் அது தொடர்பாக இடம்பெறும் அணிவகுப்பு மற்றும் நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளவே மட்டக்களப்பு விசேட படைப்பிரிவைச சேர்ந்த கணிசமான பெண்போராளிகள் கிழக்கிலிருந்து வன்னிக்குச் செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அதிபர் தாக்கப்பட்ட சம்பவம்:

# கல்விச் சமூகத்துக்கு பெரும் தலைகுனிவு

யாழ்ப்பாணம்,செப்.25

ஹாட்லிக் கல்லூரி அதிபர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட செயல் கல்விச சமூகத்தையே தலைகுனியச் செய்துள்ளது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது விடயமாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பல இன்னல்களுக்கு மத்தியில் இலங்கையின் புகழ்பூத்த கல்லூரிகளில் ஒன்றான ஹாட்லிக் கல்லூரியை தலைமை வகித்து நடத்தி வந்த இவ்வேளையில் இத்தகைய சம்பவம் அவருக்கு நடைபெற்றிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. 'சரி, பிழை இருப்பின் தங்களை இனம்காட்டி பகிரங்க விசாரணைக்கு உட்படுத்துவதுதான் சரியான வழியாகும். இத்தகைய செயல்கள் எம் இனத்தினிடையே சாத்தான் புகுந்து விட்டான் என்பதை வெளிப்படுத்துகின்றது.

இத்தகைய செயல்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதை எல்லாத்தரப்பினரும் உறுதிப்படுத்திக் கொள்ளல்வேண்டும் - என்று தெரிவித்துள்ளார்.

இச்செயல் தொடர்பாக இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் வடமராட்சிக் கிளை எடுக்கும் சகல தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு தாய்ச் சங்கம் உறுதுணையாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-3)

# உரிய நடவடிக்கை எடுக்க கோருகின்றது அதிபர் சங்கம்

யாழ்ப்பாணம்,செப்.25

ஹாட்லிக் கல்லூரி அதிபர் முஹரீபதி தாக்கப்பட்ட சம்பவத்தை வடமாகாண அதிபர்கள் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாகச் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 22 ஆம் திகதி ஹாட்லிக் கல்லூரி அதிபர் முஹரீபதி இனந்தெரியாத கும்பல் ஒன்றினால் வீட்டிலிருந்து பலவந்தமாகக் கடத்தப்பட்டு மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்டதற்கு சங்கம் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது. இச்சம்பவமானது போரினால் சீர்குலைந்த போயுள்ள வடபகுதிப் பாடசாலைகளது அபிவிருத்திச் செற்பாடுகளைப் பாதிக்கக் கூடிய ஒரு தப்பான முன்னுதாரணமாகிவிடும் ஆபத்துள்ளது.

தமிழ் மக்களது கல்விப் பண்பாட்டிற்கும் சுய மரியாதைக்கும் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியதான இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாமல் தடுக்கப்படுவதுடன் இச சம்பவத்தைப் புரிந்தவர்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவர்கள்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என வடமாகாண அதிபர்கள் சங்கம் கேட்டுக் கொள்கின்றது - என்றுள்ளது. (ஐ-3)

# மெதடிஸ்த பாடசாலை ஆசிரியரும் பகிஷ்கரிப்பு

வடமராட்சி,செப்.25

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் முஹரீபதி தாக்கப்பட்டதைக் கண்டித்து சகோதரப் பாடசாலையான பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியர்கள் இன்று புதன்கிழமை அடையாள வேலைநிறுத்தத்தில்குதிக்கிறார்கள்.

இது தொடர்பாக இப்பாடசாலை ஆசிரியர் நலன்புரிக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்:-

எமது சகோதரப் பாடசாலை அதிபர் கடுமையாகத் தாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டுள்ளார். இவ்வன்செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அத்துடன், இச்சம்பவத்தில் தொடர்புபட்டோரை கண்டுபிடித்து சட்டத்தின் முன்நிறுத்தி தண்டனை வழங்குமாறு வேண்டுகிறோம்.

இச்சம்பவம் ஆசிரியர் சமூகத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்பதை மிக்க மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

அதிபர் தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் கல்லூரி இயங்கவில்லை. ஆசிரியர்களின் வேலைநிறுத்தத்தினால் அக்கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் எவரும் நேற்றைய தினம் கல்லூரிக்குச் செல்லவில்லை. (ஐ 15-139-173)

# அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் விடுத்த அறிக்கை

யாழ்ப்பாணம்,செப்.25

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் சம்ரீபதி இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டதை யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக இணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

பல்வேறுபட்ட சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் ஹாட்லிக் கல்லூரி அதிபர் கடத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளமை கவலையையும் வேதனையையும் தருகின்றது.

கல்வி நடவடிக்கைகளில் பாடசாலையை நல்லமுறையாக அதிபர் நிர்வகித்து வருகின்றார் என்பதை கடந்தகாலக் கல்விச்செயற்பாடுகள் மூலம் அறிய முடிகிறது. எனினும், நிர்வாக நடைமுறையில் கருத்து வேறுபாடுகள் இருப்பினும் அவர் இவ்வாறு தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். யாழ்மக்களின் செல்வம் கல்வி. எனவே, கல்விச் சமூகத்தை தலைகுனிய வைத்துள்ளது இச்செயல் தாம் வெட்கப்பட வேண்டியதும்கூட. எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்கள் நடக்காவண்ணம் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ-3)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.25

வடமராட்சி கல்வி வலய பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிமுதல் இடம்பெறவுள்ள 16 வயதுப் பிரிவினர்களுக்கான ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**நெல்லியடி ம.ம. வியில்**

★ பருத்தித்துறை வேலாயுதம் ம.வி எதிர் கலட்டி றோ.க.த. பாடசாலை

★இமையாணன் அ.த.க.வித்தியாலயம் எதிர் தேவரையாளி இந்துக் கல்லூரி

**திக்கம் மைதானத்தில்**

★ பொன்னம்பலம் வித்தியாலயம் எதிர் நெல்லியடி ம.ம.வி.

★ கொற்றாவத்தை அ.த.க பாடசாலை எதிர் கரணவாய் ம.வி. (ஐ-ரி)

★ ★ ★

சங்கானை கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் 14 வயதுப் பிரிவினர்களுக்கான ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி.

★ சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயம் எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.

★ அராலி இந்துக் கல்லூரி எதிர் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்.

★ அராலி கிழக்கு அ.த.க. பாடசாலை எதிர் அராலி சரஸ்வதி ம.வி (ஐ-ரி-86)

★ ★ ★

தெல்லிப்பழை கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள 3 ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

★ மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை எதிர் வசாவிளான் ம.ம.வி.

**18 வயதுப் பிரிவு**

★ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் வசாவிளான் ம.ம.வி. (ஐ-ரி-86)

★ ★ ★

கோப்பாய் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**14 வயதுப் பிரிவு**

★ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி எதிர் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி.

★ அச்சுவேலி ம.வி. எதிர் புத்தூர் ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயம்.

★ சிறுப்பிட்டி அ.த.க பாடசாலை எதிர் புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம்

**16 வயதுப் பிரிவு**

★ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் எதிர் புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம்.(ஐ-ரி-86)

(13ஆம் பக்கம் பார்க்க)

## மாணவ தாதியர்களுக்கு!

யாழ்ப்பாணம்,செப்.25

யாழ்.தாதியர்கள் பயிற்சிப் பாடசாலையில் இடம்பெற்ற இறுதிப்பரீட்சையில் தோற்றிய 99மாணவத் தாதியர்களையும் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கடமைக்குச் சமுகம் அளிக்கும்படி வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

கடமைக்கு வரும்போது தாதிகள் பயிற்சிப் பாடசாலை அதிபரிடம் விடுவித்தல் கடிதத்தையும் பெற்று வருமாறு அவர் கேட்டுள்ளார். (ஐ-3)

## கட்டடத் தொகுதிகள் திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.25

பருத்தித்துறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கென அமைக்கப்பட்ட களஞ்சியம், நடுவப் பணியகம் மற்றும் வாகனத்தரிப்பிடம் என்பவற்றின் புதிய கட்டடத் தொகுதிகள் இன்று புதன் கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தால் திறந்து வைக்கப்படவுள்ளன. (ஐ-ரி-17)

# யாழ்.வர்த்தகரின் வீட்டில் 12 லட்சம் ரூபா நகைகள் சூறை!

## 'பெயின்ற்' அடிக்க வந்தவரின் கைவரிசையா?

யாழ்ப்பாணம்,செப்.25

யாழ்நகரைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவரின் வீட்டில் இருந்து 12 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான தங்கநகைகள் சூறையாடப்பட்டிருப்பதாகப் பொலீஸாரிடம் முறையிடப்பட்டிருக்கிறது.

'வர்ணம்பூசும்' வேலை செய்வதற்காக வீட்டிற்கு வந்த நபர் ஒருவரே வீட்டில் நகைகள் வைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டகத்தில் இருந்த நகைகளை அபகரித்துக் கொண்டு தலைமறைவாகிவிட்டார் என்று வர்த்தகர் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருக்கின்றார்.

சுமார் ஒரு மாத காலத்துக்கு முன்னர் பிரஸ்தாப வர்த்தகரின் வீட்டிற்கு வர்ணம் பூசும் வேலைகள் நடைபெற்றன என்றும் -

எஞ்சியிருந்த சிறு வேலைகளை பூர்த்தி செய்வதாகக் கூறிக்கொண்டு நேற்றுமுன்தினம் வீட்டிற்கு வந்த பிரஸ்தாப நபர், ஆள்கள் இல்லாத சமயம் பார்த்து நகைகள் வைக்கப்பட்டிருந்த அறையின் சாவியை அபகரித்து அறைக்குள் நுழைந்து நகைகளை சூறையாடிக்கொண்டு தப்பிவிட்டார் என்றும் -

நகைகளைப் பறிகொடுத்த வர்த்தகர் தெரிவித்திருக்கிறார்.

வர்ணம் பூச வந்தவரின் படம் மற்றும் ஆளடையாள விவரங்களை அவர் பொலீஸாரிடம் ஒப்படைத்திருக்கின்றார். (ஐ-ரி)

# குருநகர் மீனவர்கள் தாக்கப்பட்டதாக முறைப்பாடு

குருநகர் இறங்குதுறையூடாக குடாக்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர் சிலர் நேற்று அதிகாலை படையினரின் தாக்குதலுக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லாது வீடு திரும்பியுள்ளனர்.

வழமைபோல நேற்று அதிகாலை 2 மணியளவில் குருநகர் இறங்குதுறையில் அமைந்துள்ள இராணுவத்தின் சோதனைச் சாவடிக்கு முன்பாக அனுமதி பெறுவதற்கும் உடற்பரிசோதனைக்காகவும் மீனவர்கள் வரிசையில் காத்திருந்தனர் என்றும் -

வரிசையில் நின்ற மீனவர்கள் முண்டியடித்துக் கொண்டிருந்ததால் வரிசை குழப்பியதை அவதானித்த படையினர் மீனவர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கினர் எனவும் -

இதனால் ஆத்திரமடைந்த மீனவர்கள் இராணுவத்தினரை நோக்கி கற்களை வீசிய பின்னர் மீன்பிடிக்கச் செல்லாது வீடு திரும்பினார்கள் எனவும் -

மீனவர் தரப்பில் கூறப்படுகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்பின் குருநகர் இறங்குதுறையில் மீனவர்கள் படையினரால் தாக்கப்பட்ட முதலாவது சம்பவம் இதுவாகும். (ஐ-8-51)

# சங்கானையில் வீதி விபத்து; வயோதிபர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,செப்.25

சங்கானையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மினிபஸ் - சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த சின்னவன் (வெள்ளையன் (வயது 64) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் சைக்கிளில் வந்த சமயம் விபத்து நேர்ந்தது.

படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் சங்கானை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைக்குட்படுத்திய சிலமணி நேரத்தில் மரணமானார்.

சடலம் மரணவிசாரணையின் பொருட்டு வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

சங்கானையில் இடம்பெற்ற மற்றொரு மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த பெண் ஒருவரும் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீதியின் குறுக்காக ஓடிய மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதியது. சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஜெயந்தி (வயது42) என்பவரே காயமடைந்தவராவார். (ஐ-15)



# இஸ்ரேலியப் படைக்கு எதிரான தீர்மானம்

# ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிறைவேறியது!

## ‘வீட்டோ’வைப் பயன்படுத்துவதை தவிர்த்துக்கொண்டது அமெரிக்கா

லண்டன், செப்ரெம்பர்25

**பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் அலுவலகம் மீதான முற்றுகையை இஸ்ரேலிய இராணுவம் விலக்கிக்கொள்ளவேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்புச் சபை நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றியது. வழக்கமாக இத்தகைய சந்தர்ப்பங்களில் தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தும் அமெரிக்கா நேற்று அதனைத் தவிர்த்துக்கொண்டது.**

இஸ்ரேலிய இராணுவம் பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் அலுவலகத்தை முற்றுகையிட்டு, அதனைத் தகர்க்கும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்திக்கொள்ளவேண்டும் என்றும் -

தீவிரவாதத்துக்கு எதிராக பலஸ்தீன அதிகார சபை நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் -

ஐ.நா. பாதுகாப்புச் சபை நேற்று தீர்மானம் நிறைவேற்றியது.

காஸா பகுதியில் இஸ்ரேலிய இராணுவம் புதிதாக ஆரம்பித்த இராணுவ நடவடிக்கையில் 9 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தீர்மானம் 15 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா. பாதுகாப்புச் சபையில் 14-0 என்ற வாக்கு வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டது.

இஸ்ரேலுக்கு எதிராக பிரேரணைகள் கொண்டுவரப்படும் இத்தகைய தருணங்களில் தனது ‘வீட்டோ’ எனப்படும் விசேட அதிகாரத்தைப் பயன்படுத்தி அப்பிரேரணைகளை அமெரிக்கா தோற்கடிப்பது வழக்கமாகும். ஆனால், இந்தப் பிரேரணைக்கு எதிராக வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தாத அமெரிக்கா வாக்களிப்பதையும் தவிர்த்துக்கொண்டது.

இதேசமயம் இத்தீர்மானம் ஒரு தலைப்பட்சமானது என்று அமெரிக்கா கூறியுள்ளது.

பலஸ்தீன நகரங்களில் இருந்தும் படைகளை இஸ்ரேல் விலக்கிக்கொள்ளவேண்டும் என்றும் இத்தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேசமயம் அரபாத்தின் அலுவலகம் மீதான முற்றுகை உட்பட பலஸ்தீன பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என இஸ்ரேலிய அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி இஸ்ரேலிய தேசிய வானொலி அறிவித்தது. இத்தீர்மானத்தைப் பலஸ்தீனத் தரப்பினர் வரவேற்றுள்ளதாக பிரெஞ்சு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது. ‘சரியான திசையில் எடுத்துவைக்கப்பட்ட முதல் காலடி’ என்று இத்தீர்மானத்தை பலஸ்தீனத் தலைமை வர்ணித்ததாக அச்செய்தி நிறுவனம் தெரிவித்தது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இத்தீர்மானத்துக்கான பிரேரணைமீது சுமார் 14 மணித்தியாலங்கள் விவாதம் நடந்தமை குறிப்பிடத்தக்கது.



இஸ்ரேலிய இராணுவ முற்றுகைக்குள்ளாகியுள்ள அரபாத்தின் அலுவலகம்.

### காஸா மோதலில் 9பலஸ்தீனர் பலி!

லண்டன்,செப்.25

மேற்காசியாவின் காஸா பிரதேசத்துக்குள் நேற்றுமுன்தினம் இரவு புல்டோஸர்கள், டாங்கிகள் சகிதம் இஸ்ரேலிய இராணுவம் நுழைந்தது. அப்போது பாலஸ்தீனர்களின் கடும் எதிர்ப்பை இஸ்ரேலிய இராணுவம் எதிர்கொள்ளவேண்டியிருந்தது.

பாலஸ்தீனர்களின் கண்ணிவெடிகள் மற்றும் பொறிவெடிகள் ஆகியவற்றுக்கு இஸ்ரேலிய இராணுவம் இலக்காக வேண்டியிருந்ததாக கூறப்படுகிறது.

இந்த நடவடிக்கையின்போது பலஸ்தீன தீவிரவாதிகளின் 13ஆயுத உற்பத்தித் தொழிற்சாலைகளைத் தாம் அழித்ததாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது.

இதேசமயம் -

9பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டும், 24பேர் காயமடைந்தும் உள்ளதாக காஸா மருத்துவமனைப் பணியாளர்கள் கூறினர். இறந்தவர்களில் ‘ஹமாஸ்’ அமைப்பைச் சேர்ந்த யசீன் நஸீர்(வயது 53), அல்அகுஸா படையணி அமைப்பைச் சேர்ந்த ஜபீர் அல் கராஸி(வயது 20) ஆகியோர் அடங்குவர்.

இது ஒருபுறமிருக்க, அரபாத்துக்கு ஆதரவாக பலஸ்தீனர்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகளை நடத்தி வருகின்றனர். (ஓ)

## சுற்றுலாப் பயணிகள் வியட்நாமில் அதிகரிப்பு

ஹனனாய்,செப்.25

வியட்நாம் நாட்டுக்கு வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை கடந்த 8 மாதங்களில் 10 சதவீதம் அதிகரித்துள்ளது. வெளிநாடுகளில் இருந்து கடந்த 8 மாதங்களில் 17 லட்சத்து 50 ஆயிரம் சுற்றுலா பயணிகள் வியட்நாம் வந்திருந்தனர்.

பொருளாதார வளர்ச்சிக்கு சுற்றுலாவை அடிப்படையாக வைத்திருக்கும் வியட்நாம் இன்னும் 8 ஆண்டுகளில் இதனை மும்மடங்காக உயர்த்த திட்டமிட்டுள்ளது.

வியட்நாமுக்கு கடந்த ஆண்டு 23 லட்சம் சுற்றுலா பயணிகள் மூலம் 9ஆயிரம் கோடி ரூபா வருமானம் கிடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## மாடிப் படிக்கட்டுப் பகுதி இடிந்ததில் 21சிறுவர் பலி!

### சீன பாடசாலையில் துயரச்சம்பவம்

சீனாவில் பாடசாலைக் கட்டடம் ஒன்றின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்ததில் 21 சிறுவர்கள் உடல் நசுங்கி உயிரிழந்தனர்; மேலும் 50பேர் காயமடைந்தனர்.

வடசீனப்பகுதியில் உள்ள பெங்ஜன் நகரின் பாடசாலையின் மாடிப் பகுதிக்கு செல்லும் படிக்கட்டுப் பகுதியே நேற்றுமுன்தினம் மாலை இடிந்து வீழ்ந்தது.

பாடசாலை முடிந்து வீடுகளுக்குச் செல்லும் ஆர்வத்துடன் நூற்றுக் கணக்கான சிறுவர்கள் மாடிப்படி வழியே நெருங்கியடித்துக்கொண்டு இறங்கியபோது கட்டடப் பகுதி இடிந்து விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மாடிப் படிக்கட்டுக்களில் 4அல்லது 5படிக்கட்டுகளே உடைந்ததாகவும் -

அதன் வழியே சிறுவர்கள் சிலர் கீழே வீழ்ந்ததாகவும் -

அப்போது உடையாத படிக்கட்டுகளில் நின்ற மாணவர்களை, படிக்கட்டுக்கள் உடைந்ததை அறியாத பின்னால் நின்ற மாணவர்கள் நெட்டித் தள்ளியதால் அவர்களும் உடைந்த பகுதி வழியே கீழே விழ நேரிட்டதாகவும் -

இதனால் முதலில் கீழே வீழ்ந்த சிறுவர்களின் மேல் மேலும் பல சிறுவர்கள் வீழ்ந்ததாகவும் -

நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் இறந்த சிறுவர்களில் பெரும்பாலானவர்கள் மூச்சுத் திணறியே இறந்திருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விபத்து நடந்தபோது மின்சாரத்தடை ஏற்பட்டிருந்த காரணத்தால் மாடிப்படிக்கட்டுப் பகுதி இருளடைந்து இருந்ததாகவும் -

விபத்தின் அனர்த்தம் அதிகரிக்க இதுவும் ஒரு காரணம் என்றும் கூறப்படுகிறது.

14 சிறுமிகள் உட்பட இறந்தவர்கள் அனைவரும் 12 வயதிற்கும் 15 வயதிற்கும் இடைப்பட்டவர்களாவர்.

கீழே கடைகளும், அலுவலகங்களும் இருந்த 3மாடிக் கட்டடத்தில் மேல் மாடியில் பாடசாலை இயங்கி வந்தது. இந்த விபத்து சீனாவின் தரம் குறைந்த பொதுப் பாதுகாப்பு வசதியை எடுத்துக்காட்டுவதாகக் கூறப்படுகிறது. (ஓ)

## 18 ஆண்டுகளுக்கு முந்தைய வழக்குக்காக வை.கோபாலசாமி நீதிமன்றத்தில் ஆஜர்

வேலூர்,செப்.25

18ஆண்டுகளுக்கு முன்பு தொடரப்பட்ட வழக்குக்காக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நேற்று மயிலாடுதுறை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார். இதற்காக அவர் வேலூர் மத்திய சிறையில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டார்.

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, ‘பொடா’ சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். 18 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த தகராறு ஒன்று தொடர்பாக வைகோமீது தொடரப்பட்ட வழக்கு மயிலாடுதுறை நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

அந்த வழக்கில் வைகோவை ஆஜர்ப்படுத்துவதற்காக நேற்றுமுன்தினம் மாலை வைகோ வேலூர் மத்திய சிறையில் இருந்து திருச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். நேற்று மயிலாடுதுறை நீதிமன்றத்தில் வைகோ ஆஜர்ப்படுத்தப்பட்டார். (ஓ)

## வெளிநாட்டவர் மீது இந்தியாவில் தாக்கு!

புதுடில்லி,செப்.25

இந்தியாவின் பீகார் மாநிலத்தில் ஒரு வீட்டில் தங்கியிருந்த தென்கொரிய நாட்டினர் மீது தீவிர இந்துத்துவ அமைப்பினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பேகுசராய் என்ற இடத்திலுள்ள அனில் ஜுட் என்பவரது வீட்டில் வெளிநாட்டவர்கள் பலர் தங்கியிருந்தனர். அவர்கள் அப்பகுதியில் வாழும் இந்துக்களை மதம் மாறத் தூண்டிவந்ததாக இந்து அமைப்புகள் கடந்த சில வாரங்களாகவே குற்றஞ்சாட்டி வந்தன.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் ‘பஜ்ரவீதன்’ என்ற தீவிர இந்துத்துவ அமைப்பைச் சேர்ந்த சுமார் 50 பேர் அடங்கிய கும்பல் அனில் ஜுட்டின் வீட்டுக்குள் புகுந்தது.

அந்தவேளையில் தென்கொரிய நாட்டைச் சேர்ந்த சிலரே அங்கு தங்கியிருந்தனர். இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்துக்கு மாறிவரும் வீட்டு உரிமையாளருமான அனில் ஜுட்டும் அங்கிருந்தார்.

அவர்கள் அனைவரையும் கும்பல் கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ஓ)

## ஈராக்கை தாக்குவதற்கு அமெரிக்கா தீவிர முஸ்தீபு

ஈராக்மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிட்டிருக்கிறது. அதற்காக அரபு நாடுகளிடம் ஆதரவு திரட்டிவருகிறது.

அமெரிக்க இராணுவத் தளபதி டம்மி பிராங்ஸ் வளைகுடா நாடுகளில சுற்றுப்பயணம் செய்து அதிபர்களைச சந்தித்து வருகிறார்.

சவூதி அரேபியாவில் இளவரசர் அப்துல்லாவை அவர் சந்தித்து பேசினார். வட்டார நிலைவரம் குறித்து இருவரும் பேசினார்கள். அமெரிக்க துணை ஜனாதிபதி டிக் செனியுடன் இளவரசர் அப்துல்லா தொலைபேசி மூலம் பேசினார்.

1991ஆம் ஆண்டு ஈராக் போரில் அமெரிக்க இராணுவ முகாம் அமைக்க சவூதி அரேபியா இடமளித்து உதவியது.

‘ஈராக்மீது அமெரிக்கா ஐ.நா. சபை அங்கீகாரத்துடன் போர் தொடுத்தால் மட்டுமே ஒத்துழைப்போம். ஒருதலை பட்சமாக தாக்கினால் ஆதரவு கொடுக்கமாட்டோம்’ என்று சவூதி அரேபியா கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ)



மெக்ஸிக்கோவின் தென்கிழக்குப் பகுதியில் வீசிய புயல் மழையால் குறைந்தது 3பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக் கணக்கானவர்கள் இருப்பிடங்களை இழந்துள்ளனர். புயல் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களில் எடுக்கப்பட்ட இரு படங்கள் இவை.

# ஈராக்கில் மூக்கை நுழைக்க துடிக்கும் அமெரிக்கா அங்கு பாடம் கற்குமா?

**பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற போர்வையில் பல நாடுகளின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிட முயன்று வருகிறது. உலகின் பொலீஸ்காரன் தானே என்ற நினைப்பில் அமெரிக்கா ஈராக்மீது தாக்குதலை மேற்கொள்ளத் திட்டமிட்டு வருகிறது. தனது செல்லப்பிள்ளையான இஸ்ரேல் மேற்கொண்டுவரும் பயங்கரவாத நடவடிக்கைகளை ஏனோ அமெரிக்காவின் கண்களுக்குத் தெரியவில்லை. இது குறித்து "லங்காதீப" நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

ஈராக் நாட்டின் நிர்வாகத்தில் மாற்றங்களைக் கொண்டுவருவதே தமது திட்டமாகும் எனத் தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், அதற்காக முதலில் தாம் ஈராக்மீது தாக்குதல் மேற்கொள்ளத் தயார்நிலையில் இருப்பதாகக் கோடி காட்டியுள்ளார். அதன் பின்னர் எந்தநேரத்திலும் இத்தாக்குதலை மேற்கொள்ளக் கட்டாயப்படுத்தப்பட்டிருப்பதாக ஊடகத்துறை மூலம் தெரிவித்துள்ள அவர், உடனடியாக அவ்வகையான தாக்குதலை மேற்கொள்வது தமது நோக்கமல்ல எனவும் கூறியுள்ளார்.

உடனடியாகத் தாக்குதல் தொடுக்காது, ஈராக்கின் நிர்வாகத்தில் மாற்றம் செய்து அதாவது சதாம் ஹுசைனைப் பதவியில் இருந்து அகற்றி வேறொரு தலைமையை ஏற்படுத்துவது அவசியமானதென அண்மையில் மீண்டுமொருமுறை அவர் உறுதியாகத் தெரிவித்தார். ஈராக் அதிபர் சதாம் ஹுசைனுக்கு எதிராக ஈராக்கில் இயங்கும் எதிர்ப்புக் குழுவினர் அமெரிக்க உப ஜனாதிபதி உட்பட அமெரிக்க அரசு உயர் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியதையடுத்தே, ஜோர்ஜ் புஷ்ஷின் இந்த அறிவிப்பு வெளியானது.

இற்றைக்கு 11 ஆண்டுகளுக்கு முன்னர், வளைகுடா யுத்தம் முடிவடைந்த கையோடு இவ்வெதிர்ப்புக் குழுவினர் சதாம் ஹுசைனின் தலைமையிலான நிர்வாகத்தை மாற்றியமைக்க முயன்றனர். ஆயினும், அம்முயற்சி கைகூடவில்லை. ஷியா மதக் குழுவினரையும் தம்முடன் இம்முயற்சியில் இணைத்துச் செயற்பட வைக்கக்கூடிய திறமை எதிர்ப்புக் குழுக்களிடம் இருக்கவில்லை. வடக்கில் இருந்து குர்திஷ் இனப் போராளிகளைப் பலப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளும் இவ்வாறே பயனற்றுப்போயின. இவ்வாறான பின்னணியில் அண்மையில் அமெரிக்க உதவி ஜனாதிபதி சிக்ஜென், அமெரிக்க அரசுச் செயலாளர் கொலின் பவல்

**தமிழில்:வியெஸ்ரி**

மற்றும் பாதுகாப்புச் செயலாளர் றொனால்ட் றம்ஸ் பீல்ட் ஆகியோர் ஈராக்கிய அரச எதிர்ப்புக் குழுவுடன் பேச்சு நடத்தியிருந்தனர்.

ஈராக்கிய அரச எதிர்ப்புக் குழுவினருக்கு ஒத்துழைப்பு வழங்குவதை மீண்டும் உறுதிப்படுத்துவதற்காக அவர்கள் அச்சந்திப்பை மேற்கொண்டனரா? அல்லது இராணுவத் தாக்குதலொன்றை மேற்கொள்ளத் திட்டமிடும் அமெரிக்காவின் முயற்சிகளுக்கு அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய ஒத்துழைப்புப் பற்றி ஆராய்வதற்காக அவ்வாறு சந்தித்துக்கொண்டார்களா? என்பது தெரியவில்லை.

ஜனாதிபதி புஷ் ஊடகவியலாளர்களுடன் மேற்கொண்ட சந்திப்பில் தெரிவித்த கருத்துக்கள் ஈராக்கின் நிர்வாகத்தை மாற்றியமைப்பதே அமெரிக்காவின் திட்டமாகுமென மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளன. அச்சந்திப்பின்போது செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி புஷ், தாக்குதல் மேற்கொள்ளத் தாம் தீர்மானித்திருந்தபோதிலும் அதன் விவரங்களை ஊடகங்களுக்கோ, எதிரிகளுக்கோ தெரிவிக்கப்போவதில்லை எனக் கூறியுள்ளார்.

இருந்தபோதிலும் ஜனாதிபதி புஷ், அமெரிக்க அரசுச் செயலர் கொலின் பவல் மற்றும் பாதுகாப்புச் செயலர் றம்ஸ் பீல்ட் ஆகியோர் ஈராக்கில் நிர்வாக மாற்றமாக, சதாம் ஹுசைனுடைய நிர்வாகத்தை முழு அளவில் மாற்றி அவரை அரசிலிருந்து வெளியேற்றுவதன்மூலம் முற்றிலும் புதிதானதொரு நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டுமெனக் கருதுவதாகத் தோன்றுகிறது.

சதாம்ஹுசைனின் எதிர்ப்புக் குழுத் தலைவர்கள் ஆறு பேருடன் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள உயர் மட்ட அதிகாரிகள் இரண்டு மணி நேரம் மேற்கொண்ட பேச்சுகளின் முடிவில், அந்த அறுவரும் அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் றம்ஸ் பீல்ட்டுடன் தொலைக்காட்சியில் தோன்றி ஈராக் நிலைமை பற்றிக் கருத்துப் பரிமாற்றம் செய்துகொண்டனர்.

இக்கருத்துப் பரிமாற்றத்தின் நோக்கம் சதாம்ஹுசைனது ஜனாதிபதி ஆட்சியில் இருந்து ஈராக்கிய



மக்களை விடுவித்தலேயாகும் என பின்னர் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது ஈராக்கிய எதிர்ப்புக் குழுவின் பேச்சாளரான ஹமீட் - அல - பயதி கூறினார்.

சதாம்ஹுசைனின் நிர்வாகத்தில் வெறுப்புக்கொண்டுள்ள ஈராக்கிய மக்களுக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தூண்டுதல் அளிப்பதற்கான பின்னணி எதுவும் இல்லை எனக் கருதலாம்.

குர்திஷ் இனப் போராளிகளையும் ஷியா மதப் பிரிவினரையும் பாதுகாக்கும்பொருட்டே ஈராக்கின் வடக்கிலும் தெற்கிலும் வான்வெளிப் பயணத் தடை நடைமுறைப்படுத்தப்பட்டது. ஈராக்கிய மக்களின் எதிர்கால சுபீட்சத்துக்காகவே அமெரிக்க அரசு ஈராக்கிய எதிர்ப்புக் குழுவினரை ஆதரிப்பதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரியொருவர் நியாயப்படுத்தியுள்ளார்.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனை தாக்குதல்மூலம் பதவியிலிருந்து அகற்றும் திட்டத்தை வகுக்கும் குழு, உலக மக்களுக்குப் பேரழிவை ஏற்படுத்தும் வகையில் ஈராக் செயற்படுவதைத் தடுத்து நிறுத்துவது அவசியமானதென நிரூபித்தாலன்றி, அமெரிக்க காங்கிரஸின் அதிகாரபீடம் அத்திட்டத்தினை அனுமதிக்கப்போவதில்லை. அமெரிக்க ஜனாதிபதி புஷ் அங்கத்துவம் வகிக்கும் குடியரசுக் கட்சியின் சில காங்கிரஸ் உறுப்பினர்கள்கூட ஈராக் தாக்கப்பட வேண்டுமென்பதை ஆதரிக்கவில்லை.

சதாம்ஹுசைன் தமது நாடான ஈராக்கினுள் எவ்வாறு செயற்பட்டாலும் அது அமெரிக்காவுக்கு அச்சுறுத்

**மாற்றார் தோட்டத்திலிருந்து...**

தலாய் அமையாது எனவும், இதனைக் கருத்திற்கொள்ளாது ஈராக் மீது தாக்குதல் மேற்கொள்ள முயல்வது நிலைமை மோசமடையவே வழிவகுக்குமெனவும் அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரக் குழுவின் தலைவர் டிக், ஆர்மடேஜ் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்துக்கு அமைய பேராபத்தை விளைவிக்கும் போராயுதங்கள் சம்பந்தமான தேடுதல் மேற்கொள்ள அதற்கென நியமிக்கப்பட்ட குழுவினரை ஈராக்கினுள் அனுமதிக்க ஜனாதிபதி சதாம்ஹுசைன் மறுத்தால், ஈராக்குக்கு எதிராகத் தாக்குதல் மேற்கொள்வதைத்தவிர வேறு மாற்றுவழி இல்லையென அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும் ஈராக் பற்றிய அவரது கருத்தை ஆதரிப்போரும் கூறுகிறார்கள்.

அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் றம்ஸ் பீல்ட் முன்னர் பல தடவைகள் குறிப்பிட்டது போன்று ஈராக் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய இரசாயன ஆயுதங்களை தன்வசம் வைத்துள்ளதாகவே நம்பப்படுகிறது. அவை மிகுந்த பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருப்பதன் காரணமாக வான்தாக்குதல்மூலம் அவற்றை அழிப்பது இலேசான விடயமல்ல. மேலும், எதிர்வரும் மூன்றாண்டுகால முடிவுக்குள், பெரும் அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய அணு ஆயுத உற்பத்தியிலும் வளர்ச்சி பெறக்கூடிய திறன் ஈராக்கிடம் காணப்படுவதாக அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறை குறிப்பிட்டுள்ளது.

இதனால் ஈராக்வசமுள்ளதாகக் கூறப்படும் பேராபத்தை விளைவிக்கக்கூடிய இரசாயன ஆயுத உற்பத்தி வசதிகளை அழிப்பது மட்டுமே ஜனாதிபதி புஷ்ஷின் திட்டமெனக் கூற முடியாது. அந்நடவடிக்கையுடன் சதாம் ஹுசைனின் நிர்வாகத்தையும் அழித்துவிடுதலே அவரது திட்டமாகும். அண்மையில் ஜனாதிபதி புஷ் நிகழ்த்திய பேச்சின்சாரமும் இவ்வகையிலேயே அமைந்தது.

ஆயுத பரிசோதனைகள் இடம்பெற்றாலும்சரி இடம்பெறாவிட்டாலும்சரி வேறுவிதமான மனிதரென சதாம்ஹுசைனைக் கூற இயலும்வரையில் அவர் ஓர் எதிரியாகவே கணிக்கப்படல் வேண்டுமென புஷ் கூறியுள்ளார். அவரது கருத்துப்படி ஈராக்கிய மக்கள் எதிர்கொள்ளும் பயங்கரவாதத்தினின்றும் அவர்களை விடுவிப்பது ஆப்கானிஸ்தானில் மேற்கொள்ளப்பட்டதுபோன்ற யுத்த நடவடிக்கை மூலமே சாத்தியமாகும்.

## சதாமை பதவி கவிழ்க்கப்போய் கையைச் சுடப்போகிறாரா புஷ்?

அதாவது, ஆகாய, தரைத் தாக்குதல்கள்மூலமாக சதாம்ஹுசைனைத் தோற்கடித்துப் பதவியில் இருந்து அகற்றி, ஜனநாயக ஆட்சிமுறையினை அறிமுகப்படுத்துதலே அவரது நோக்கமாகும். ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சிக்கெதிராக வான் தாக்குதல் மேற்கொள்வதை எதிர்த்த குழுக்களின் எதிர்ப்பைச் சமாளித்து நடவடிக்கை மேற்கொள்வதில் அமெரிக்கா வெற்றிகண்டமை இத்தருணத்தில் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

ஆனாலும், குர்திஷ் இனப் போராளிகள் காரணமாக ஆப்கானிஸ்தானின் தலிபான்களின் ஆட்சிக் காலத்தைவிட ஈராக்கின் நிலைமை வேறுபடுவதற்கு சாதகமான வாய்ப்புண்டு. 1991இல் வளைகுடா யுத்தம் முடிவடைந்த கையோடு குர்திஷ் இனப் போராளிகளின் பிரதேசங்களில் வளர்ச்சியடைந்த போராட்டங்களை அழித்தொழிப்பதற்கு சதாம்ஹுசைன் படை நடவடிக்கை மேற்கொண்டார். அச்சமயம் குர்திஷ் இனப் போராளிகளைப் பாதுகாக்கும் பொருட்டு அமெரிக்கா வான்தாக்குதலை மேற்கொண்டது. இப்பொழுதுகூட ஈராக்கிய படை நடவடிக்கைகளைத் தடுத்துநிறுத்தும்பொருட்டு, வட ஈராக்கில் வான் தடைப் பிரதேசங்களில் இந்நடவடிக்கை, மேற்கொள்ளப்படுகின்றது.

ஆனாலும், சதாம்ஹுசைனின் கடந்த காலத்தில் வடஈராக்கில் குர்திஷ்தான் நாடு உருவாக்கும் முயற்சியை அமெரிக்கா ஆதரிக்கவில்லை.

பெற்றோல் வளத்தின்மூலமான செல்வந்த நிலையே வட ஈராக்கில் சுதந்திரமான குர்திஷ்தான் நாடொன்றினை உருவாக்க முயன்ற குர்திஷ் இனத்தவர்களுக்கும், ஈரானில் குர்திஷ் இனத்தவர்கள் வாழும் பகுதிகளுக்காகப் போராடிய குர்திஷ் இனத்தவர்களுக்கும் தைரியத்தை அளித்தது என்பதில் சந்தேகமில்லை. எப்படியிருந்தபோதும், தனியான 'பாபிராச்சியம்' எனப் பெயரிடப்பட்ட ஈரானின் குர்திஷ் இனத்தவர் வாழும் பிரதேசம் தனது அண்மைய ஆதரவாளரான துருக்கியின் குர்திஷ் இன மக்களின் பிரதேசம் போன்று அமைவதில் அமெரிக்கா எவ்வித அக்கறையும் காட்டவில்லை.

இதன் காரணமாக, அண்மையில் வாஷிங்ரன் நகரில் இடம்பெற்ற பேச்சுக்களில் இரு குர்திஷ் இனப் போராளிக் குழுக்கள் கலந்துகொண்டபோதும், ஒரு சுதந்திரமான குர்திஷ்தான் அரசை ஏற்படுத்துவது தொடர்பான எவ்வித உறுதிமொழியையும் அமெரிக்க அரசிடமிருந்து அவர்களால் பெற்றுக்கொள்ளமுடியவில்லை.

அச்சந்திப்பின்போது அமெரிக்க பாதுகாப்புச் செயலர் ரம்ஸ் பீல்ட், ஈராக்கின் மோதல்களுக்கு வெளிப்படையான ஆதரவு வழங்கப்படமாட்டாதென்ற கருத்தை வெளிப்படுத்தியிருந்தார். இதனால் ஆப்கானிஸ்தானில் நடைபெற்றதுபோன்று அரச எதிர்ப்புக் குழுக்கள்யாவும் ஒன்று சேர்ந்து குர்திஷ்தான் தனிநாட்டை உருவாக்கும் சாத்தியம் உண்டென்பது சந்தேகமே.

ஈராக் ஜனாதிபதி சதாம்ஹுசைனைப் பதவியினின்றும் நீக்க தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்வதற்கு அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷிற்கு அமெரிக்க காங்கிரஸ் சபையின் அனுமதி பெறமுடியாமை மட்டும் தடையாக அமையவில்லை. ஆப்கானிஸ்தான் பிரச்சினையின் போது பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் அமெரிக்க ஜனாதிபதி புஷ் மேற்கொண்ட படை நடவடிக்கைகளுக்கு பக்கபலமாக ஆதரவு வழங்கினார். அதுபோன்று ஈராக் விடயத்திலும் உதவி புரிவதை பிரிட்டனில் ஆட்சியிலிருக்கும் தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் விரும்பவில்லை. தொழிற்கட்சியின் பலம்வாய்ந்த பிரிவான தொழிற்சங்கங்களின் சம்மேளனம்கூட ஈராக் மீதான நடவடிக்கைகளில் பிரிட்டன் பங்குபெறுவதை ஆதரிக்கவில்லை. பெரும் உயிரழிவை ஏற்படுத்தக்கூடிய இரசாயன ஆயுதங்கள் சம்பந்தமான சச்சரவில் பேச்சுகள்மூலமாகத் தீர்வொன்றைக் காணமுடியுமென தொழிற்கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பிர்கள் கருதுகிறார்கள்.

அண்மையில் ஈராக்கின் தலைநகர் பாக்தாத் நகரில் சதாம்ஹுசைனைச் சந்தித்த பிரிட்டிஷ் தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரொருவர் பேரழிவை ஏற்படுத்தும் இரசாயன ஆயுதங்களைச் சோதனையிடுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதப் பரிசோதனைக் குழுவினை ஈராக்கிற்குள் மீண்டும் அனுமதிப்பதற்கு ஈராக் தயாராயிருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால், பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சின் காரியாலயம் இத்தகவலை மறுத்ததோடு, இது அந்த தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரின் சொந்தக் கருத்தேயாகுமெனக் கூறியுள்ளது.

ஜனாதிபதி சதாம்ஹுசைன் ஐக்கிய நாடுகள் சபையின் யோசனைகள் யாவற்றையும் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருப்பதாகவும், பேரழிவு தரும் ஆயுதங்களை சோதனையிடும் அதிகாரிகள், எதுவித தடைகளுமின்றி ஈராக் முழுவதிலும் தாம் விரும்பும் எந்த இடத்திலும் சோதனை நடவடிக்கை மேற்கொள்ள இடமளிக்கத் தயாராயிருப்பதாகவும் கூறியதாக மேற்குறிப்பிட்ட பிரிட்டிஷ் தொழிற்கட்சி உறுப்பினர் கலோவே குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இது சதாம்ஹுசையினது இன்னொரு கபடமான கருத்தெனக் கூறியிருக்கிறது. இது ஈராக்கின் முன்னைய நிலைப்பாட்டில் பெரிய மாறுதலைத்தனையும் கொண்டுவரவில்லை.

பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினருக்கு அளித்த உறுதிமொழி சதாம்ஹுசைனின் முன்னைய நிலைப்பாட்டிலிருந்து வேறுபட்டிருப்பது ஒரு காரணமாகிறது. பேரழிவு விளைவிக்கும் இரசாயன ஆயுதங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் குழுவினரின் நடவடிக்கைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கால எல்லை குறிப்பிடப்பட வேண்டும் எனவும், அதேசமயம் 1991 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்



படுத்தப்படும் பொருளாதாரத் தடை முடிவுக்குக்கொண்டு வரப்படும்தினம் நிச்சயிக்கப்பட வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

அமெரிக்காவுடன் இணைந்து பிரிட்டனும் மேற்கொள்ளவுள்ள கடும் தாக்குதலை தவிர்த்துக்கொள்ளும் நோக்கத்தில் ஈராக் ஜனாதிபதி சதாம ஹுசைன் இந்த நிபந்தனைக்கமைய இரசாயன ஆயுத சோதனைக் குழுவுக்கு இடமளிக்கத் தயாராயிருப்பதாக அறிவித்துள்ளார்.

ஆனால், அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷால் இக்கோரிக்கையை இலேசில் மறுத்துவிட இயலாது. பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தில் நிபந்தனையின்றி அமெரிக்காவிற்கு உதவிய ஜேர்மனி, ஈராக்கிற்கு எதிரான இந்நடவடிக்கையைக் கடுமையாக எதிர்ப்பதாக ஜேர்மன் அதிபர் புறோடர் தெரிவித்துள்ளார். ஜேர்மன் அதிபரின் இக்கருத்தை ஐரோப்பிய சமூகநாடுகள் பல ஆதரிப்பதாகத் தெரிகிறது.

எப்படி இருந்தபோதும், பேரழிவு ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் குழுவினர் ஈராக்கினால் அனுமதிக்கப்பட்டாலும்சரி, அனுமதிக்கப்படாவிட்டாலும்சரி, அதிபர் புஷ்ஷின் இலக்கு சதாம்ஹுசைனின் நிர்வாகத்தை மாற்றியமைப்பதே ஆகும் என்பது வெளிப்படையாகத் தெரியவருகிறது.

இது அமெரிக்காவினது மட்டுமல்ல, பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இஸ்ரேல் நாட்டினதும் எதிர்பார்ப்பாகும். பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு இரகசியமான முறையில் உதவி வழங்கிவரும் ஈராக்கின் சதாம்ஹுசைனின் நிர்வாகத்தை அழிப்பது, பலஸ்தீன விடுதலை இயக்கத்தினரின் பயங்கரவாதத்துக்கு எதிராக நடத்தப்படும் யுத்தத்தில் பெறுமதிமிக்க பங்களிப்பாகுமென்பது இஸ்ரேலினது கருத்தாகும்.

இத்தகைய பின்னணியில், அமெரிக்க காங்கிரஸின் மறுப்புக்காகவோ, சர்வதேச விரோதத்தைச் சம்பாதிக்க வேண்டியிருக்கும் என்பதாலோ, ஈராக்கிற்கு எதிராகத், தாம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கும் தாக்குதலை அமெரிக்க ஜனாதிபதி புஷ் கைவிடுவாரெனக் கூறஇயலாது.

பொருளாதாரத்தடையின்மூலம் சதாம்ஹுசைனினது நிர்வாகத்தை அழிப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்ததை அமெரிக்கா உணர்ந்துகொள்ளும். சதாம்ஹுசைனினது எதிர்ப்பாளர்கள் குழுக்களுக்கு பலவழிகளில் ஆதரவளித்துப் பலம் பெறுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளும் பலனளிக்கவில்லை. ஆதலால் மிஞ்சி இருப்பது இரகசியமான தாக்குதல் ஒன்றே. அது எப்போது மேற்கொள்ளப்படுமெனக் கூறுவதற்கு ஜனாதிபதி புஷ் தயாராயில்லை. ஆகவே, அமெரிக்க அணுகுமுறையில் மாற்றம் ஏற்படாதிருக்குமானால் ஜனாதிபதி புஷ்ஷுக்கு ஈராக் மீது தாக்குதல் மேற்கொள்வதைத்தவிர வேறுவழியேதும் இல்லை. ✦

உதயன்

## சமாதானத்துக்கு ஆப்பு!

நெடுந்தீவில் புதிய கடற்படைத் தளம் ஒன்று அமைக்கும் நடவடிக்கையை கடற்படையினர் திடீரென ஆரம்பித்திருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் காலையில் கடற்படைத் தரையிறங்கு கலம் ஒன்றில் நெடுந்தீவில் வந்திறங்கிய ஐம்பதுக்கும் அதிகமான கடற்படையினரே முகாம் அமைக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

நெடுந்தீவில் கடந்த காலங்களில் பெரிய படை முகாம்களோ, தளங்களோ அமைந்திருக்கவில்லை. - ஈ.பி.டி.பியினரின் முகாம்களைத் தவிர.

1998இல் ஒருசில மாதங்கள் அங்கிருந்த ஈ.பி.டி.பியினருக்கு பக்கபலமாக அங்கு கடற்படையின் சறிய அணி ஒன்று நிலைகொண்டிருந்தது. ஆனால், அதுவும் பின்னர் வாபஸ் பெறப்பட்டுவிட்டது.

வடக்கில் கோர யுத்தம் நிகழ்ந்த காலங்களிலும்சரி, பின்னர் அரசு - புலிகள் யுத்தநிறுத்தமும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் நடைமுறைக்கு வந்த காலத்திலும்சரி நெடுந்தீவில் கடற்படை முகாம் ஏதும் அமைந்திருக்கவில்லை.

இப்போது அங்கு புதிய முகாம் ஒன்றைத் திடீரெனத் திறப்பதன்மூலம், வழமைபோல மீண்டும் ஒரு தடவை புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கேலிக்குள்ளாக்கி, தேவையற்ற சர்ச்சைகளை உருவாக்கி, பதற்றத்தைத் தோற்றுவிக்கும் தனது 'திருவிளையாடலை' கடற்படை ஆரம்பித்திருக்கின்றது.

நெடுந்தீவில் கடற்படை முகாம் அமைக்கப்படுவதை ஆட்சேபித்து புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.இளம்பரிதி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் நோக்கற்பாலவை.

யுத்தநிறுத்த உடன்பாட்டு ஏற்பாடுகளின்படி - பாதுகாப்பு நடவடிக்கைகளையும் சோதனைச் சாவடிகளையும் நிறுவுவதை இருதரப்பினரும் மீளாய்வு செய்து பொதுமக்களுக்குத் தொந்தரவு ஏற்படுத்துவதைத் தவிர்க்கும் நோக்குடனான முறைகளை அறிமுகப்படுத்தவேண்டும். யுத்த நறுத்தம் நடைமுறைக்கு வரும் நாளிலிருந்து அறுபது நாள்களுக்குள் இந்த ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து 200 நாள்கள் கழிந்தநிலையில் - பாரிய முகாம்களைத் தவிர இதர முகாம்கள் அனைத்தையும் மூடி மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் சுதந்திரமான நடமாட்டத்திற்கும் இருதரப்பும் சேர்ந்து வழிகோலவேண்டிய இவ்வேளையில் - இப்பாரிய கடற்படை முகாமை அமைப்பது யுத்தநிறுத்த ஒப்பந்த மீறலாகும் - இப்படி இளம்பரிதி சுட்டிக்காட்டியுள்ளார்.

பாரிய முகாம்கள், உயர் பாதுகாப்பு வலயங்கள் ஆகியவை தொடர்பான சிக்கல்களை ஆராய்ந்து, இணக்கமான - சுமுகமான - தீர்வைக் காண்பதற்காக இராணுவ மற்றும் புலிகளின் உயர் மட்டத் தளபதிகளைக் கொண்ட கூட்டுச் செயலணி ஒன்றை அமைப்பதற்கு புலிகளும் அரசுத் தரப்பினரும் இணங்கியுள்ளனர்.

தாய்லாந்துப் பேச்சுக்களின் முதல் பெறுபேறாகக் கிடைத்தது இந்தச் செயலணி ஸ்தாபிக்கும் இணக்கம்தான்.

அந்த இணக்கம் ஏற்பட்டு, கூட்டுச் செயலணி அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் - இடையில் திடீரென - கூட்டுச் செயலணியின் அதிகாரத்துக்குள் உட்படும் ஒரு விடயம் தொடர்பான - நடவடிக்கை விரைந்து எடுக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி கூட்டுச்செயலணி இயங்கத் தொடங்கிவிட்டால், புதிய கடற்படை முகாம் அமைப்பதை அது தடுத்து நிறுத்தும் என்ற எண்ணத்தில், அந்தச் செயலணி உருவாவதற்கு முன்னர் அவசர அவசரமாக கடற்படைத் தளம் அமைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

அரசு - புலிகள் புரிந்துணர்வை குழப்பும் 'பெரும் பணியை' கடற்படையே அதிகம் மேற்கொண்டு வருகின்றது என்று இப்பத்தியில் திரும்பத் திரும்பக் குறிப்பிட்டு வருகின்றோம்.

நெடுந்தீவில் புதிய கடற்படை முகாம் அமைக்கும் முயற்சியும் அந்தவகையில் ஒன்று என்பதை அரசுதரப்பு புரிந்துகொள்ளவேண்டும்.

கடற்படையின் இத்தகைய போக்கைத் தடுத்து - கட்டுப்படுத்த - அரசுத் தலைமை தவறுமானால் சமாதானத்துக்கு ஆப்பு வைக்கும் விபரீதங்கள் விளைந்து விடும். மீண்டும் சரிசெய்ய முடியாத நிகழ்வுகளுக்கு களம் அமைத்ததாகிவிடும்.

சமாதானத்தில் விருப்புக்கொண்டுள்ள சக்திகள் அவசரமாகக் கவனிக்கவேண்டிய விடயம் இது.

**எமது உரிமைகளை நாமே வென்றெடுக்கவேண்டும். அதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்கக்கூடாது.**
*- லெப். கேணல் திலீபன்.*



## கல்வி நிர்வாக சேவைப் பரீட்சை!

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 3ஆம் வகுப்புக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இப்பரீட்சைக்கென யாழ்.மத்திய கல்லூரியிலும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. மாவட்டத்தில் இருந்து சுமார் 750 பேர் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இதேவேளை - இலங்கை கணக்காய்வுச் சேவையின் வகுப்பு IIஇன் தரம் IIக்கு கணக்காய்வு அத்தியட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28ஆம், 29ஆம் மற்றும் ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதிகளில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஓ-10)

## மானிப்பாய்ப் பகுதியில் போலியோ தடுப்புமருந்து வழங்கப்படும் இடங்கள்

சண்டிலிப்பாய்,செப்.25

ஐந்து வயதுக்குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் போலியோ (இளம்பிள்ளை வாதம்) நோய்த்தடுப்பு மருந்து கொடுக்கும் திட்டத்தின்கீழ் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமையன்று காலை 7 மணிமுதல் பின்வரும் நிலையங்களில் வைத்துத் தடுப்பு மருந்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை, சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கம், மாதகல் பிள்ளையார் கோயிலடி, இளவாலை மத்திய மருந்தகம், சங்கானை அரசினர் வைத்தியசாலை, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகம், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம், வட்டுக்கோட்டை தெற்கு திருஞானசம்பந்த வித்தியாசாலை, சங்கரத்தை மாதர் சங்கம், ஆனைக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையம், சண்டிலிப்பாய் ஆலங்குழாய் சனசமூக நிலையம், நவாலி வை.எம்.சி.ஏ., வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்தகம், பண்ணாகம் ஆரம்ப சுகாதார நிலையம், சுழிபுரம் மாதர் சங்கம், மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம், சுதுமலை குண்டடி சனசமூக நிலையம், சாவற்கட்டு ஆரம்ப சுகாதார நிலையம், அராலி சரஸ்வதி வித்தியாலயம், அராலி இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலை ஆகிய இடங்களில் போலியோ தடுப்பு மருந்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-135)

### தென்மராட்சி தெற்கில்

## மீன்பிடி, விவசாயத்துக்கான கட்டுப்பாடுகள் விரைவில் தளர்வு

தென்மராட்சி,செப்.25

தென்மராட்சி தெற்குப் பகுதிகளான கோயிலாக்கண்டி தொடக்கம் கேரதீவு, அறுகுவெளி வரையான பகுதிகளில் நெல் வயல்களில் இவ்வருடம் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படலாமெனத் தெரியவருகிறது.

பாதுகாப்புக் காரணங்களால் இப்பகுதியில் சில இடங்களில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப் படையினர் விதித்திருந்த தடை விரைவில் நீக்கப்பட்டு காலபோக நெற்செய்கைக்கு அனுமதி வழங்கப்படுமெனக் கூறப்படுகிறது.

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சையடுத்து உச்ச பாதுகாப்பு வலயப் பகுதிகளில் உள்ள வயல்களில் விவசாய நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபடவும் -

தென்மராட்சிப் பிரதேச கடலேரிப் பகுதிகளில் தற்போது மீன்பிடிக்க விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு முன்னரைப்போல மீனவர்கள் தொழில் செய்யவும் - அனுமதிக்கப்படலாமென அறியப்படுகிறது. (ஓ-117)

**நாளை**

புரட்டாதி 10
வியாழக்கிழமை
(26.09.2002)
திதி : பஞ்சமி
பின்னிரவு 4.41 வரை.
நட்சத்திரம்: கார்த்திகை
வைகறை: 5.54 வரை.
கார்த்திகை விரதம்
சுபநேரம் 7.32 - 9.02
ராகுகாலம் : 1.32 - 3.02
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

பிரச்சினைகளை எதிர்நோக்கும்போது முட்டாள்கள் புலம்புகிறார்கள்; புத்திசாலிகள் அதிர்ஷ்டசாலிகள் ஆகின்றார்கள்.

### வேம்பொடுகேணிப் பாடசாலையில்

## கட்டாந்தரையில் அமர்ந்து மாணவர் கல்விகற்கும் அவலம்

தென்மராட்சி,செப்.25

மாணவர்கள் கட்டாந்தரையிலும் ஆசிரியர்கள் மரக்குற்றிகளிலும் அமர்ந்து கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதைப பளை வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலையில் காணமுடிகிறது.

இப்பாடசாலையில் தரம் 8தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இடம்பெயர்ந்தவேளையில் இப்பாடசாலை ஆனைக்கோட்டையில் இயங்கியது. தற்போது போதிய தளபாடங்கள் இல்லாமல் பளையில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கல்வி மேம்பாட்டுப் பிரிவினால் வழங்கப்பட்ட தளபாடங்கள் தரம் 1 தொடக்கம் தரம் 7 வரையுள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரால் பயன்படுத்தப்பட்டு வருவதால் ஏனைய வகுப்பு மாணவர்கள் தளபாடங்கள் இன்றி தரையில் அமர்ந்து கல்வி கற்கநேரிட்டதாகக் கூறப்படுகிறது. (ஓ-117)

### 'யாழ்கோ' நிறுவனத்தால்

## 3ஆயிரம் லீற்றர் பால் நாளாந்தம் கொள்வனவு!

யாழ்ப்பாணம்,செப்.25

திருநெல்வேலி கலாசாலை வீதியில் இயங்கும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தினமும் 3 ஆயிரம் லீற்றர் பாலைக் கொள்வனவு செய்து உபயோகித்து வருவதாக சங்கத்தின் பொதுமுகாமையாளர் என்.ராஜகுரு தெரிவித்தார்.

கொள்வனவு செய்யப்பட்ட பாலில் விநியோகிக்கப்பட்டது போக எஞ்சிய பாலைக்கொண்டு யோக்கட், பட்டர், மில்க்லொலி, சுவையூட்டிய பால், ஐஸ்கிறீம், நெய், தயிர், மோர், மில்க் சர்பத், ஐஸ்கோப்பி போன்ற பொருள்களை வசதிக்கேற்ப - சிறிய அளவில் - உற்பத்தி செய்து சந்தைப்படுத்திவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

'எமது உற்பத்திப் பொருள்களுக்கு நுகர்வோரிடமிருந்து பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. ஆயினும், இவ்வுற்பத்தி நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு நிதிப் பற்றாக்குறை இடையூறாகவுள்ளது. அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சிடமிருந்து நிதி உதவிகள் கிடைக்கும் பட்சத்தில், யாழ்.மாவட்ட அபிவிருத்தியில் எமது சங்கமும் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கும்'. - என்று பொதுமுகாமையாளர் மேலும் தெரிவித்தார். (ஓ-9)

### கச்சாய் ஊடாகச் செல்லும்

## சாவகச்சேரி - கிளாலி வீதியை செப்பனிடுமாறு கோரிக்கை

கொடிகாமம்,செப்.25

இராணுவத்தினரால் மக்கள் போக்குவரத்துக்குத் திறந்துவிடப்பட்ட சாவகச்சேரியில் இருந்து கிளாலிக்குச் செல்லும் கச்சாய் வீதி போக்குவரத்துக்கு உதவாத படுமோசமான நிலையில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இவ்வீதி சுமார் 7 வருடங்களுக்கும் மேலாகத் திருத்தப்படாத நிலையில் உள்ளது. சாவகச்சேரியில் இருந்து 3 கிலோமீற்றர் தூரம் வரையான அப்துல்லா சிலைபடி மட்டும் 2000 ஆம் ஆண்டு செப்பனிடப்பட்டது. கிளாலி வரையான மிகுதிப் பகுதி படுமோசமான நிலையில் காணப்படுகின்றது.

அத்துடன் கொடிகாமத்தில் இருந்து கச்சாய் துறைமுகத்திற்குச் செல்லும் கொடிகாமம் கச்சாய் வீதியும் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் காணப்படுகின்றது. இவ்வீதி கொடிகாமத்தில் இருந்து 2கிலோமீற்றர் தூரத்தில் கிறிஸ்தவ ஆலயம் வரையான பகுதி பல ஆண்டுகளுக்கு முன்னர் திருத்தப்பட்டுள்ளது. மிகுதி துறைமுகம் வரையான பகுதி சேதமடைந்தே காணப்படுகிறது.

தென்மராட்சியில் விவசாயப் பயிர்ச் செய்கைக்குச் சிறந்த மண்வளம் கொண்ட இடமாக இப்பகுதிக் கிராமங்கள் உள்ளன. இப்பிரதேசத்தில் 85வீதமான மக்கள் விவசாயிகளாக உள்ளனர். இவர்கள் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் சந்தைகளையே பயன்படுத்துகின்றனர்.

ஆகவே, இவ்வீதிகளைத் திருத்தும் நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட பிரதேச அதிகாரிகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (ஓ-ரி)


**சிறுவர்களுக்கு ஒரு மகிழ்வான செய்தி!**

சிறாராகிய உங்களுக்கு.....

- மகிழ்ச்சியான சூழலை ஏற்படுத்த
- சுய திறமைகளை ஊக்குவிக்க
- ஆக்கத் திறன்களுக்கு வாய்ப்பளிக்க
- சிறந்த தொடர்புகளை உருவாக்க

**மாவட்ட சிறுவர் கழகம்**
**District Child Club(DCC)**
அமைக்கப்படுகிறது



அங்கத்தவர்களாக விரும்புவோர் உங்கள் சுயவிவரங்களை 10.10.2002 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அஞ்சலிடவும்.

ரீ.ரீ.மயூரன்
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் 30, யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

நீங்கள் 18 வயதிற்குட்பட்டவர்களா?
அப்படியாயின் அங்கத்தவராகலாம்.

# புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறு விவரங்கள் கல்வி வலயம் சேகரிப்பு

குருநகர், செப்.25

ஐந்தாம்தர புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுமுன் தினம் யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்தன.

யாழ்.புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயத்தில் இருந்து இப் பரீட்சைக்குத் தோற்றிய 168 பேரில் 79பேர் சித்தியடைந்துள்ளார்கள்.

இப்பாடசாலையைச் சேர்ந்த வி. விகர்னன் 165 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் ஆறாவது இடத்தை அடைந்துள்ளார். இவருக்கு அடுத்ததாக எம்.ஜே.டெலோசனா 161 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவரது மாவட்ட நிலை 10ஆகும்.

இதேவேளை -

தற்போது பாடசாலைகளுக்கு பரீட்சைப் பெறுபேறுகளின்படி இப் பரீட்சை சம்பந்தமாக பின்வரும் விவரங்களை யாழ். கல்வி வலயத்துக்கு அனுப்பிவைக்குமாறு யாழ். கல்வி வலயம் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களைக் கோரியுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றியோர் பெயர், பரீட்சையில் சித்திபெற்றோர் எண்ணிக்கை, உதவி எண்ணிக்கை பெறத் தகுதியானோர் எண்ணிக்கை மற்றும் 100-117 வரையும், 70-99 வரையும் 00-69 வரையும் புள்ளிகள் பெற்றோர் எண்ணிக்கை ஆகிய விவரங்களையும் இப்பட்டியலில் சேர்க்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ-51)

## கத்தோலிக்க இலக்கிய சாகித்திய விழா

கொழும்புத்துறை,செப்.25

இலங்கைக் கத்தோலிக்க எழுத்தாளர் சங்கத்தால் நடத்தப்படும் 2002ஆம் ஆண்டுக்கான இலக்கிய சாகித்திய விழா எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு தேசிய கத்தோலிக்கருக்கான இலக்கியப் போட்டிகள் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களுக்கான கட்டுரை, சிறுகதைப் போட்டிகளும் பெரியவர்களுக்கான சிறுகதைப் போட்டியும் இடம்பெறவுள்ளது. (ஒ-ரி)

## யூரியா உரமானிய புதிய திட்டம் ஒத்திவைப்பு

கொழும்பு,செப்.25

யூரியா உரமானிய புதிய திட்டம நடைமுறைக்கு வராது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி நடைமுறைக்கு வரவிருந்த இப்புதிய திட்டம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

விவசாய, கால்நடை அபிவிருத்தி, சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க இதனைத் தெரிவித்திருக்கிறார்.

ஒக்ரோபர் முதல் நடைமுறைப்படுத்தப்படவிருந்த உரமானிய புதிய திட்டம் மீளாய்வு செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (எ)

## வெவ்வேறு நேரம் காட்டும் மணிக்கூண்டு

குருநகர்,செப்.25

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற யுத்தத்தினால் சேதமடைந்து திருத்தியமைக்கப்பட்டுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தில் உள்ள மணிக்கூடுகள் மூன்றும் ஒரே நேரத்தில் வெவ்வேறு நேரங்களைக் காட்டி வருகின்றன. நான்காவது மணிக்கூடு ஏற்கனவே சேதமடைந்து செயற்படாமல் உள்ளது. (ஐ-51)

## கசிப்பு வழக்கில் ரூபா 80 ஆயிரம் அபராதம்!

யாழ்ப்பாணம்,செப்.25

பெருமளவிலான கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபர் ஒருவருக்கு யாழ்.நீதிமன்றினால் 82 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொட்டடி முத்தமிழ் வீதியைச் சேர்ந்த மேற்படி நபருக்கே 80 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 2 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு யாழ்.நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ச.இளங்கோவன் உத்தரவிட்டார்.

அண்மைக்காலத்தில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் விதிக்கப்பட்ட அபராதத் தொகைகளில் இது அதிகம் எனக் கூறப்படுகிறது.

குற்றவாளி உடனடியாகவே தண்டப்பணம் 80 ஆயிரம் ரூபாவையும் செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

## திருடப்பட்ட கதவுகள் மீட்பு

தென்மராட்சி,செப்.25

சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள வீடொன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஆறு சோடி கதவுகள் சாவகச்சேரி நகர கிராம அலுவலரினால் கைப்பற்றப்பட்டன.

இக்கதவுகளை ஆதாரங்காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு கிராம அலுவலர் வை.இராசரத்தினம் அறிவித்துள்ளார். (ஐ-117)

# தென்மராட்சியில் பல இடங்களில் திலீபன் நினைவுப் பந்தல்கள்

சாவகச்சேரி,செப்.25

தியாகி திலீபனின் நினைவு நாளை ஒட்டி தென்மராட்சியில் பல இடங்களில் நினைவுப் பந்தல்களில் திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது -

சாவகச்சேரி நகரில் சாவகச்சேரி நவீன சந்தை முன்பாகவும் மீசாலை பழைய ரயில் நிலையச் சந்தி, கொடிகாமம் பஸ்தரிப்பு நிலையம் போன்ற இடங்களில் பந்தல்கள் அமைக்கப்பட்டு திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

பல இடங்களிலும் சிவப்பு - மஞ்சள் நிறத்திலான கொடிகள் கட்டப்பட்டுள்ளன. அரச திணைக்களங்களிலும் திலீபனின் திருவுருவப் படம் வைக்கப்பட்டு அழுகுற சோடனைகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை -

வன்னிப் பெருநிலப் பரப்பில் பல இடங்களிலும் அரச திணைக்களங்கள், பாடசாலைகள், பொது இடங்கள், புலிகளின் அலுவலகங்கள் போன்ற இடங்களில் திலீபனின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது. (ஐ-31)

# பட்டதாரி அதிபர்கள் 85 பேருக்கு வெளிநாட்டுப் புலமைப் பரிசில்!

பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி அதிபர்களுக்கு வெளிநாட்டு புலமைப் பரிசிலை வழங்க கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் ஐந்து வருட சேவையை, அதற்குரிய கொடுப்பனவுடன் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இவர்களுக்கான புலமைப் பரிசில் நேர்முகப் பரீட்சைகள் மிக விரைவில் நடத்தப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் வட - கிழக்கு மாகாணத்திலிருந்து 85 பட்டதாரி அதிபர்கள் இப்புலமைப் பரிசிலைப் பெறவுள்ளனர்.

இந்தப் புலமைப் பரிசில் திட்டத்திற்கு 400 பட்டதாரி அதிபர்கள் விண்ணப்பித்துள்ளனர் என்று வட - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஐ.எம். இஸ்ஸதீன் தெரிவித்தார்.

இந்த 400 பேரில் 85 பேரைத் தெரிவுசெய்யப் பல வரையறைகள் வைத்துள்ளோம். ஆங்கில அறிவு, கணனி அறிவு, அனைத்திற்கும் மேலாக கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் 5 வருடம் கட்டாயம் சேவை என்ற பல நிபந்தனைகளுடனேயே புலமைப் பரிசிலுக்கு ஆட்களை உள்வாங்கினோம் என்று பணிப்பாளர் இஸ்ஸதீன் தெரிவித்தார். (ஐ)

# சிலாபத்தில் கடை ஒன்று தீயில் எரிந்து சாம்பலானது!

காரைதீவு,செப்.25

சிலாபம் கோட்டைவீதியில் அமைந்துள்ள மின்சாரப்பொருள்கள் விற்பனை நிலையம் ஞாயிற்றுக் கிழமை இரவு 9மணியளவில் திடீரென தீப்பற்றி முற்றாக எரிந்து சாம்பலாகிவிட்டது.

சுமார் 2மணித்தியாலங்களாக தீயைக் கட்டுப்படுத்த பொதுமக்களுடன் இணைந்து சிலாபம் பொலீஸார் தீவிர முயற்சி செய்தனர்.

சேதம் பற்றி மதிப்பீடு இதுவரை காணப்படவில்லை.

இந்நிலையில், இத்தீச் சம்பவம் சதித்திட்டமா அல்லது மின் ஒழுக்கா என்பதை அறிவதற்கான விசாரணைகளை சிலாபம் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

இறக்குமதி செய்யப்பட்ட, உயர்ரக
டச்சு விதை உருளைக்கிழங்கு வகைகள்
ஒக்ரோபர் மாத நடுப்பகுதியிலிருந்து
எம்மிடம் கிடைக்கும்.
எதிர்பார்க்கமுடியாத குறைந்த விலை.
அத்துடன்
யாழ்ப்பாண மண்ணுக்கு வாய்ப்பான
குறுகிய கால இனவகைகளான
வெள்ளை நிற லிரா, செந்நிற ராஜா,
செந்நிற லௌரா, செந்நிற றொசன்னா,
வெள்ளைநிற எரின்டி, வெள்ளை நிற
பிறமியர் என்பனவும் எம்மிடம் கிடைக்கும்.
தொடர்பு: செல்வா - 077-482559
அக்ரோபா பொட்டற்றோ (தனி) நிறுவனம்
இல.100, கென்ற் றோட், கொழும்பு-09.
(C/23909)




வியாபார உலகை வெற்றி கொள்ளுங்கள்

இன்றைய உலகில் வியாபாரத்துறையில் மிக உயர்ந்த ஸ்தானத்தை அடைய, கைத்தொழிலுக்கு தேவைப்படும் சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டமொன்று உங்களுக்கு அவசியமாகும்.

* அவுஸ்திரேலியாவில் உள்ள ஆறு மிக உயர்ந்த பல்கலைக்கழகங்கள் வர்த்தகம், முகாமைத்துவம், வியாபாரம், நிதி, பொருளியல், மற்றும் சர்வதேச உறவுகள் என பலதரப்பட்ட துறைகளில் பாடநெறிகளை வழங்குகின்றன.

* அவுஸ்திரேலியாவில் உள்ள முன்னணி வியாபாரத் தாபனங்களில் கற்கும் போதே அனுபவத்தைப் பெறும் வகையில் இப்பாடநெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

* அபிவிருத்தியடைந்த ஒரு நாட்டில் சீவியத்தொழில் அறிவு, தேர்ச்சிகள், மற்றும் வேலை அனுபவம் ஆகியவற்றை உங்களால் ஈட்ட முடியும்.

2003 பெப்ரவரிக்கான மாணவர்களின் தெரிவுவரை அவுஸ்திரேலியாவுக்கான மாணவ விசாக்கள் வழங்கல் தளர்த்தப்பட்டுள்ளது.


பின்வரும் பல்கலைக்கழகங்களில் பாடநெறிகள் நடத்தப்படுகின்றன:


* கன்பரா, அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம்
* சிட்னி பல்கலைக்கழகம்
* மெல்போர்ன் பல்கலைக்கழகம்
* அடிலெய்ட் பல்கலைக்கழகம்
* தென் அவுஸ்திரேலியா பல்கலைக்கழகம்
* ப்ளின்டர்ஸ் பல்கலைக்கழகம்

மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்-
திருமதி கோகிலாதேவி மகேந்திரராஜா
கந்தம் வன்னியசிங்கம்வீதி
இணுவில் தெற்கு, சுன்னாகம் 070 - 212641
கிழமை நாள்கள் - மாலை 5.00 - 9.00
வார இறுதி நாள்கள் - காலை 8.00 - மாலை 9.00

edlocate
EDUCATION AUSTRALIA
எட்லொக்கேற் (பிறைவேற்) லிமிற்றெற்
23/1, றொஸ்மீட் பிளேஸ், கொழும்பு 07
தொலைபேசி: 670748, 074 - 618718 பக்ஸ்: 074 - 790957
ஈமெயில்: marketinge@edlocate.lk
வெப்சைட்: www.edlocate.lk

Impact House of Advertising





தியாகி திலீபனின் நினைவு தினத்தை ஒட்டி குடாநாட்டின் பல பகுதிகளிலும் பவனிவரும் அலங்கார ஊர்தியையும் அதில் தத்ரூபமாகக் காட்சிதரும் தியாகியின் உருவத்தையும் படங்களில் காணலாம்.

### சமாதான முயற்சிகள் தொடருகின்றபோதும்

# பெருமளவு ஆயுத தளபாடங்கள் அடுத்த ஆண்டு கொள்வனவு

கொழும்பு,செப்.25

வழமைபோல அடுத்த வருடமும் பெருமளவு போர்த்தளபாடங்கள் மற்றும் நவீன ஆயுதங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு அரசு திட்டமிட்டிருக்கின்றது. இதற்கான கேள்வி அறிவித்தல்களை பாதுப்பு அமைச்சு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஆயுத விநியோகஸ்தர்களிடம் கோரியுள்ளது - என்று செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன.

விமானப் படையினருக்கான தாக்குதல் விமானங்கள், உலங்கு வானூர்திகள் மற்றும் போக்குவரத்து விமானங்கள் உட்பட 20 வானூர்திகள், அவற்றுக்கான உதிரிப்பாகங்கள் என்பனவும் கடற்படையினருக்கான போர்க்கப்பல்கள், அதிவேக தாக்குதல் பீரங்கிப் படகுகள் மற்றும் கண்காணிப்புப் படகுகள் உட்பட 12 கடற்கலங்களும் இவற்றில் அடங்குகின்றன.

போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றபோதிலும் அடுத்த வருடத்துக்கான ஆயுதக் கொள்வனவில் மாற்றங்கள் செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-4)

### அதிபர் மீதான தாக்குதல்

# தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வடமராட்சிக்கிளை கண்டனம்

வடமராட்சிகிழக்கு,செப்.25

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் எம்ஹரிபதி கடந்த சனிக்கிழமை இரவு அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டமையை இலங்கைத தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வடமராட்சி வலயக் கிளை வன்மையாகக் கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி அதிபர் எம்ஹரிபதி கடந்த சனிக்கிழமை இரவு அவரது வீட்டில் இருந்து இனம் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டமை வடமராட்சி கல்விச் சமூகத்துக்கு ஏற்பட்ட பலத்த அடியும் சவாலுமாகும்.

இத்தாக்குதலை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வடமராட்சி வலயக் கிளை வன்மையாகக் கண்டிப்பதுடன், மேலும் இவ்வாறான சம்பவங்கள் நிகழாதிருக்க அனைத்துத் தரபினரும் ஆவன செய்ய வேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறது. இச்சம்பவம் பற்றி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கைளில் குதிக்கும் என்பதைத் தெரிவித்து கொள்கின்றது.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-182)

# உலக நாடுகளில் அகதிகளுக்கு பலதரப்பட்ட துன்புறுத்தல்கள்

### நோர்வே அகதிகள் சபை தகவல்

கொழும்பு,செப்.25

இலங்கை உட்பட உலக நாடுகளில் உள்ள அகதிகள், பலதரப்பட்ட துனபுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுகின்றனர் என்று ஐ.நா.சபையின் கீழ் செயற்படும் நோர்வே அகதிகளுக்கான சபை தெரிவிக்கின்றது.

உலக நாடுகளில் அகதிகளாக 2 கோடியே 50 லட்சத்துக்கு மேற்பட்டோர் இருக்கின்றனர் எனவும் - இலங்கையில் உள்நாட்டுக்குள் அகதிகளானோரின் எண்ணிக்கை 10 லட்சமாகும் எனவும் - நோர்வே அகதிகளுக்கான சபையின் கணிப்பீட்டில் தெரியவந்திருக்கிறது.

அகதிகளானோர் தத்தமது நாடுகளிலேயே பாலியல் துன்புறுத்தல்கள் உட்பட பல கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் எனவும், பெரும்பாலானோர் வலுக்காட்டாயமாகத் தொழில்களில் ஈடுபடுத்துப்படுகின்றனர் எனவும், அந்தக் கணிப்பு தெரிவிக்கின்றது.

பல நாடுகள், அகதிகள் குறித்து சிரத்தை காட்டுவதில்லை எனவும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. அகதிகளுக்கு உதவவோ அல்லது அவர்களை அந்த அவலத்திலிருந்து மீட்கவோ சர்வதேச உதவி வழங்கும் அமைப்புக்கள் முன்வந்தாலும் பல நாடுகள் தமது இறைமைத்தன்மை போன்ற காரணங்கள்மீது கூடுதலாகக் கவனம் செலுத்துவதால் அந்த அமைப்புக்களின் நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் நோர்வே அகதிகளுக்கான சபை கூறுகின்றது. (எ)

# 5 ஆயிரம் படையினரை திரட்ட நடவடிக்கை

இராணுவத்துக்கு மேலும் 5ஆயிரம் பேரைத் திரட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் படைக்கு ஆள் சேர்ப்பதற்கு அரசு மேற்கொள்ளும் இரண்டாவது முயற்சி இதுவாகும். யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்து ஒரு வாரத்தில் இராணுவத்துக்கு ஐயாயிரம் பேரைத் திட்டுவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும் 475பேர் மட்டுமே புதிதாக இணைந்துகொணடனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் இந்தத் தடவை ஆள் சேர்ப்பின்போது படையில் இணைவதற்கான கல்வித்தகைமை மேலும் குறைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

# ஐ.ஜி.பி.பதவிப் போட்டியில் விக்டர் பெரேரா பெயரும்!

கொழும்பு,செப்.25

புதிய பொலீஸ்மா அதிபர் பதவிக்கு யார் நியமிக்கப்படுவார்கள் என்ற சர்ச்சை கிளம்பியுள்ள தற்போதைய சூழ்நிலையில் பிரதிப் பொலீஸ்மா அதிபர் விக்டர் பெரேராவை அந்தப் பதவிக்கு நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்திருப்பதாக அவருடன் தொடர்புடைய வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டது.

விக்டர் பெரேரா முன்னர் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றியவர்.

எனினும், சேவை மூப்பில் இவரைவிட சிரேஷ்ட நிலையில் பல பொலீஸ் அதிகாரிகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. (ஐ)

### சரத் அமுனுகம மாத்தளையில் பேச்சு:

# அரசு பக்கமுள்ள 15 எம்.பிக்கள் பொ.ஐ.முவுடன் இணையத் தயார்!

### பிக்குகள் முன்னிலையில் வாக்குறுதி அளித்தனராம்

மாத்தளை,செப்.25

அரசமைப்பின் 19ஆவது சட்டத் திருத்தத்துக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எக்காரணம் கொண்டும் பெறமுடியாது. தற்போது அரசை ஆதரித்துவரும் முஸ்லிம் எம்.பிக்களில் 10பேர் பொ.ஐ.முவுடன் இணைந்து கொள்வதற்கு எங்களோடு பேச்சு நடத்திவருகின்றனர். இவர்கள் தவிர ஐ.தே.க.எம்.பிக்கள் ஐவரும் பொ.ஐ. முன்னணியில் இணைந்து கொள்வதாகப் பிக்குமார் முன்னிலையில் வாக்குறுதி அளித்துள்ளனர். அரசு எந்த நேரத்திலும் கவிழலாம் என்பதற்கு ஒரு முன்னறிவித்தலே நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ள இந்த 19ஆவது சட்டத்திருத்தம்.

பொ.ஐ.முவின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம இவ்வாறு தெரிவித்தார்.

இறத்தோட்டைத் தேர்தல் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளைகளின் புனரமைப்புக்கூட்டம் மாத்தளை மாநகரசபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசியபோது -

ஐதேக. இப்போது ஒரு மிகச்சிக்கலான காலகட்டத்தில் அடி எடுத்து வைத்துள்ளது. மிகவும் பலவீனம் அடைந்துள்ள நிலையிலும் தொடர்ந்தும் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்ற நப்பாசை காரணமாக 19 ஆவது சட்டத்திருத்தத்தை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவந்துள்ளது. இந்தச் சட்டத் திருத்தத்துக்கு மூன்று முக்கியகாரணங்களை அரசு முன்வைத்துள்ளது. முதலாவது இனப்பிரச்சினைத் தீர்வு; இரண்டாவது பொருளாதார அபிவிருத்தி; மூன்றாவது பலவீனமுற்றிருக்கும் அரசைப் பலமுள்ளதாக்குவது. இந்த மூன்றில் முக்கியமாக கவனிக்க வேண்டியது அரசு தற்போது பலவீனமுற்ற நிலையில்தான் இருக்கிறது என்பதுதான்.

ஒருபக்கம் ஹக்கீம்; மறுபக்கம் தொண்டமான்; அடுத்தபக்கம் தமிழ்க் கட்சி எம்பிக்கள். அவர்கள் எல்லாம் மிகவும் அவதானத்துடன் செயற்பட்டு வருகின்றனர் என்பதை அரசு மறந்துவிடக்கூடாது. பொஐமு. ஆட்சிக்காலத்தில் வட-கிழக்கு புனரமைப்புக்காக - ஜனாதிபதி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மூலம் - 60 கோடி ரூபாவை ஒதுக்கிக்கொடுத்தார். ஆனால இன்றைய அரசாங்கம் அமைச்சர் மகேஸ்வரனுக்கு ஒரு கோடிரூபாவை மாத்திரமே ஒதுக்கித் தந்துள்ளது. ஆகவே, ரணிலைவிட சந்திரிக்கா பலமடங்கு நல்லவரென்று அமைச்சர் மகேஸ்வரன் பகிரங்கமாகவே கூறியுள்ளார். ஆகவே, அவர்களெல்லாம் அரசுக்கு மிக நிதானத்துடன்தான் தமது ஆதரவைக் கொடுத்து வருகின்றனர்.

பிரபாகரனுடன் நேரடியாக பேச்சு நடத்தி நாட்டின் ஒருபகுதியை தாரை வார்த்துக்கொடுக்க பிரதமர் திட்டம் தீட்டியுள்ளார். பிரதமர், வடக்கு - கிழக்கு ஆட்சி புலிகளின் கைகளுக்கு போனால் அப்பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்களின் கதி என்னவாகும் என்பதை இப்போதே அந்த மக்கள் உணர்ந்துகொண்டிருப்பதால்தான் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 10 எம்.பிக்கள், பொ.ஐ.முவோடு இணைந்து இந்தச் சட்டத்திருத்தத்துக்கு தமது எதிர்ப்பைத் தெரிவிக்க முன்வந்துள்ளனர். அதற்கான பேச்சு தற்போது நடைபெற்று வருகிறது.

இந்தச் சட்டத்திருத்தத்துக்கு எதிராக வழக்குத்தொடரவிருக்கின்றோம். இந்த வழக்கை விசாரித்து இதுவிடயமாக மக்களின் அபிப்பிராய வாக்கெடுப்பைப் பெறவேண்டுமென நிச்சயமாக நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கும்.

1956ஆம் ஆண்டு ஸ்ரீல.சு.க.மேற்கொண்ட அதே போராட்டம் இப்போது மீண்டும் ஆரம்பித்துள்ளது. அன்று கொண்டுவரப்பட்ட மொழிக் கொள்கை இல்லாவிட்டால் இன்று நாட்டில் எல்லோருமே ரணிலைப்போல 'கோட்டும்','ரையும்'தான் அணிந்து கொண்டிருப்பர். நமது இனத்தையும், நாட்டையும் காப்பாற்றவே நாம் மீண்டும் ஒருமுறை அந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது - என்றார். (ஐ)

## சொட்டு மருந்து வழங்கும் தினங்கள்

யாழ்ப்பாணம்,செப்.25

போலியோ நோய்த்தடுப்பு சொட்டு மருந்து கொடுக்கும் தினங்கள் எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமையும் - ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதியும் என யாழ்.சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி உ.சிவபாதசுந்தரம் அறிவித்துள்ளார். (ஐ-9)

# ஊனமுற்ற படையினரின் சங்கம் சமாதான முயற்சிக்கு வரவேற்பு

கொழும்பு,செப்.25

தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளைத தாம் வரவேற்பதாக உடல் ஊனமுற்ற படையினர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தச் சங்கம் விடுத்திருக்கும் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 20 ஆண்டுகளாக இடம்பெற்ற போரை முடிவுக்குக்கொண்டு வந்து புரிந்துணர்வு ஒப்பந்தம், சமாதானப் பேச்சுக்கள் ஆகியவற்றை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வது வரவேற்கத்தக்கதாகும்.

கடந்த கால யுத்தத்தினால் பெரும் எண்ணிக்கையானவர்கள் கொல்லப்பட்டார்கள். நாட்டின் அனேக பெண்கள் விதவைகளானார்கள்.

யுத்தத்தின் கொடூரத்தன்மையை அனுமதித்த போர் வீரர்கள் என்ற வகையில் தற்போதைய சூழ்நிலை குறித்து நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். தெற்கில் இனவாதம் பேசும் சில கட்சிகள் உண்மை நிலையை உணராது முன்னெடுத்துச் செல்லும் பிரசாரத்தில் எதுவித அடிப்படைகளும் கிடையாது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## பாராட்டி வாழ்த்துகின்றேன்

**153 புள்ளிகளைப் பெற்று 5ஆம் ஆண்டு**
புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எனது மருமகள்

**ஸ்மிருதி ரஞ்சன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்

(8675) - யாழ்.வதிரிவாசன்

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் செல்லையா கந்தசாமி

*அன்போடும் பண்போடும் வாழ்ந்து அமரராகிவிட்ட எமது குடும்பத் தலைவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.09.2002) புதன்கிழமை காலை 7மணியளவில் முகத்துவாரம் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் எதிர்வரும் (27.09.2002) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நிகழும் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

*இல.162, வாசல வீதி,*
*கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13.*
*தொலைபேசி: 347253/077-362663*

- குடும்பத்தினர்.

(8681)

## மரங்கள் அழிப்பு

கோப்பாய்,செப்.25

கோப்பாய் - கைதடி வீதியின் இருமருங்களிலுமுள்ள பயனுள்ள பல மரங்களை விறகுத் தேவைக்காக சிலர் வெட்டிவருவதை அவதானிக்க முடிகிறது.

இம்மரங்கள் உவர் சதுப்பு மண்ணில் வளரும் தன்மை கொண்டவை. இவற்றினை 95ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் நாட்டி பராமரித்து வளர்த்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-72)

## மருத்துவர் பதில் கடமை

நவாலி,செப்.25

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை மருத்துவர் விடுமுறையில் சென்றுள்ளதால் இணுவில் அரசினர் வைத்தியசாலை மருத்துவர் மாலை நேரத்தில் மானிப்பாய் வைத்தியசாலையில் பதில் கடமையாற்றி வருகிறார்.(ஒ-100)

## மிதிவெடியில் சிக்கி பசுமாடு காயம்!

சண்டிலிப்பாய்,செப்.25

மேய்ச்சலுக்குச் சென்ற பசுமாடு ஒன்று மிதிவெடியில் சிக்கி படுகாயமடைந்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை பண்டத்தரிப்பில் நடைபெற்றுள்ளது.

பெரிய விளானுக்கும் மாதகலுக்கும் இடையில் பண்டத்தரிப்பு ஊடாக முன்னர் இராணுவத்தால் அமைக்கப்பட்டிருந்த நீண்ட மண் அணைப்பகுதியில் இந்த பசுமாடு மேய்ச்சலுக்கு சென்ற வேளையில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. இப்பகுதி விவசாயி ஒருவருக்கு சொந்தமான இப்பசுமாடு 12ஆயிரம் ரூபா பெறுமதியுடையதென்று தெரிவிக்கப்பட்டது. இப்பகுதியில் ஏற்கனவே பலமாடுகள் மிதிவெடியில் சிக்கி படுகாயமடைந்தும், இறந்தும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-135)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகளுடன் யாழ்.மாவட்டத்தில் 17ஆவது இடத்தைப் பெற்றுச் சித்தியடைந்த *ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை மாணவன்*

**செல்வன்**
**கணேசதாஸ் அனோஜன்**

அவர்கள் மேன்மேலும் கல்வியில் சிறப்புற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

*'தம்மனை' அளவெட்டி மேற்கு,*
*அளவெட்டி.*

(8686) அப்பப்பா, அப்பம்மா, வவி அத்தை குடும்பம்.

## மரண அறிவித்தல்

### கந்தையா இராசலிங்கம் (Retired Station Master)

மலேசியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொல்லங்கலட்டி தெல்லிப்பழையை வதிவிடமாகக் கொண்டவரும் தற்பொழுது இல.12,57ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தையில் வசித்து வந்தவருமான கந்தையா இராசலிங்கம் அவர்கள்(22.09.2002) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலாயன் பென்ஷனியர் கந்தையா-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரவணமுத்து-சிதம்பரம் தம்பதியரின் அருமை மருமகனும் தவமணி அவர்களின் அன்புக் கணவரும் மனோகாந்தன்(விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக் கழகம், நாவல), சுபோதினி(ஜேர்மனி), சுடர்வதனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இளங்குமரன்(ஜேர்மனி), குணசீலன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்தூரி, தக்சினி, கவிலாஸ் ஆகியோரின் அன்புப் பேரனாரும் காலஞ்சென்ற பகவதி, சந்திரகாந்தம், நவமணி காலஞ்சென்ற நற்றுணை, சிவசிவா ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(26.09.2002) வியாழக்கிழமை மகிந்த மலர்ச்சாலையில்(Mahinda Florist) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கல்கிசை - டெஹிவளை பொதுமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*12, 57ஆவது ஒழுங்கை,*
*வெள்ளவத்தை. T.P: 361515.*

தகவல்:
இ.மனோகாந்தன் (மகன்) (C/23944)


இந்த முதலீடு தினந்தோறும் உங்களுக்குப் பலன் கொண்டு வரும்



பஜாஜ்
முச்சக்கர வண்டிகள்

விலை ரூ. 191,350/- இலிருந்து மேல்
(எல்லா வரிகளும் அடங்கும்)

எதிர்காலத்திற்காக முதலீடு செய்வது புத்திசாலித்தனமான செயல். எனினும் அவ்வாறான முதலீட்டை மேற்கொள்ளு முன்னர் அதிலுள்ள சாதக பாதகங்கள் பற்றி அறிந்திருக்க வேண்டும். அதிலும் பஜாஜ் முச்சக்கரவண்டிகளில் செய்யும் முதலீடானது வியக்கத்தக்க வகையில் முதலீடுசெய்த முதல் தினத்திலிருந்தே பலன்ளிக்கக் கூடியது.

எனவே பஜாஜ் முச்சக்கரவண்டியில் இன்றே முதலீடு செய்யுங்கள். அதன்மூலம் நீண்டகால பலனைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு கிட்டு வதோடு நிலையான தினசரி வருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும். ஒரு மாத்திற்கு நீங்கள் உழைக்கும் வருமானத்தை சிந்தியுங்கள். முதலீட்டைப் பெருக்கும் அற்புத வழி இது வென்பதை நிச்சயம் உணர்வீர்கள்.

ஏனைய சலுகைகளைப் பாருங்கள்

- சிறிய அல்லது மலிவான பராமரிப்புச் செலவு
- மலிவான ஓட்டக் கட்டணம்
- சிறந்த எரிபொருள் பாவனை





டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

த. பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ. பே: 074-700600, பக்ஸ்: 074-700677, 687175
பிரதேச கிளை அலுவலகங்கள்: 174B,கட்டுகஸ்தோட்டைவீதி, கண்டி. தொ. பே: 08-226146 பக்ஸ்: 08-238134
27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ. பே: 027 50037 பக்ஸ்: 027-50222
382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ. பே: 041-28488 பக்ஸ்: 041-27488
றீகல் மாவத்தை, அம்பாறை. தொ. பே: 063-22997 பக்ஸ்: 063-23662
31பீ, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ. பே. 025-25048/9 பக்ஸ்: 025-25050
தனசிரி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொ. பே/பக்ஸ்: 045-22389
இல. 116, குருணாக்கல் வீதி, புத்தளம். தொ. பே/பக்ஸ்: 032-65527

Tradlanka

*பஜாஜ் - உங்களது நாளாந்த இலாபத்துடன் பயணிக்கும் முதலீடு*

# நடைபாதை வியாபாரிகள் இந்தியாவிலிருந்தும் வருகை!

## தாயத்து, பாசிமாலை விற்பனை சூடுபிடிக்கிறது

யாழ்ப்பாணம்,செப்25

நீண்டகால இடைவெளிக்குப் பின்பு இந்தியாவின், தமிழ்நாட்டில் இருந்து நடைபாதையோர சிறு வியாபாரிகள் குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ளது.

'காட்டு ராஜாக்கள்' என்ற பூர்வீகத்தை உடைய காட்டுவாசிகளாகிய இக்குழுவினர் காட்டு விலங்குகள் மற்றும் பறவைகளின் உறுப்புகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட தாயத்து, மணிமாலை போன்ற பொருள்களை விற்பனை செய்வதற்காகவே இங்கு வருகைதந்துள்ளனர்.

இப்பொருள்களை யாழ்பஸ்நிலையப் பகுதி, ஆஸ்பத்திரிப் பகுதி மற்றும் ஆலயத்திருவிழாக்கள், மக்கள் அதிகமாகக் கூடும் இடங்கள் ஆகியவற்றில் விற்பனை செய்து வருவதுடன், தமது பொருள்களின் மகிமையைப் பற்றியும் மக்களுக்கு எடுத்துக் கூறி வருகின்றனர். இதன் காரணமாக மக்களும் அவற்றை விரும்பி வாங்கிச்செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இப்பொருள்கள் 250 ரூபா முதல் 500 ரூபா வரையும் விற்பனை செய்யப்படுகின்றன.(ஐ-10-ரி)

### மாநகரசபைக்கு சொந்தமில்லாதபோதும்

# குருநகர் மாடி குடியிருப்பு மக்களின் சுகாதார நலன் பேணி வருகிறோம்!

## 'உதயன்' செய்திக்கு ஆணையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,செப்.25

குருநகர் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டடம் யாழ்.மாநகர சபைக்கு சொந்தமில்லாதபோதும் அங்கு வாழும் மக்களின் சுகாதார நலன்களைப் பேணும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த 15ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையின் 3ஆம் பக்கத்தில் 'குருநகர்ப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடு' என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பாக அவர் அனுப்பியுள்ள விளக்கத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணையாளர் அனுப்பியுள்ள விளக்கக் கடிதத்தில தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குருநகர் தொடர்மாடி யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமானதல்ல. அது வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாகத்திற்குட்பட்டதாகும். அங்கு பாவனையிலிருக்கும் மலசலகூடக் குழி திறந்த நிலையிலும் நிரம்பியும் உள்ளதனால் ஏற்படும் சுகாதாரச்சீர்கேடு, தொற்று நோய் பரவும் ஆபத்து என்பன பற்றி மாவட்ட முகாமையாளருடன் கடிதம் மூலம் தொடர்பு கொண்டு மேற்படி சுகாதாரச் சீர்கேடுகளை விரைவாக நிவர்த்தி செய்து அங்குள்ளவர்களின் சுகாதார நலனைப் பேணுமாறு கோரியிருந்தோம்.

இதனிடையே மேற்படி வீட்டுத் திட்டத்தில் குடியிருப்போரை அழைத்து கலந்துரையாடிய பொழுது மலசலக்கூடக் குழியை சுத்திகரிப்பதற்குரிய தொழிலாளியை சபை ஏற்பாடு செய்யுமெனவும் - அகற்றப்படும் கழிவுகளை புதைப்பதற்குரிய குழியை குடியிருப்பாளர்கள் வெட்டித் தருவதாகவும் - இணக்கம் காணப்பட்டது.

ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு கழிவுகளைப் புதைப்பதற்குரிய குழியை குடியிருப்பாளர்கள் இது வரை வெட்டுவிக்காத நிலையிலும், திறந்த நிலையிலுள்ள மலசலகூடக் குழியை மூடுவதற்கேற்ற மூடிகளை சபை தனது செலவில் செய்து வருகின்றது. இதற்காகும் செலவு குடியிருப்பாளர்களிடமிருந்து அறவிடப்படவுள்ளது.

குறிப்பிட்ட கட்டடம் மாநகரசபைக்குச் சொந்தமில்லாதபோதிலும் அங்கு வாழும் மக்களின் சுகாதார நலன்களைப் பேணுவதற்காகவும், தொற்று நோய் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் உரிய நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுவருகிறோம் - என்று அதில் உள்ளது. (ஓ)

# ஆனந்தன் வடலி வீதிப் பகுதியில் மிதிவெடி அகற்றக் கோரிக்கை

வலி.வடக்கு,செப்.25

அரியாலை மத்தி ஆனந்தன் வடலி வீதிப் பகுதியில் உள்ள காணிகளில் காணப்படும் கண்ணிவெடிகளை அகற்றி அங்கு மக்களை மீளக்குடியமர்த்த வசதி செய்துதரும்படி அப்பகுதி மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

அப்பகுதியில் நிலைகொண்டுள்ள 514ஆவது படைப்பிரிவின் அதிகாரி, யாழ்மாவட்ட படைத் தளபதி, கண்ணிவெடி அகற்றும் பொது நிறுவனமான கலோ மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர், யாழ்.அரச அதிபர் ஆகியோரிடம் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே இவ்வீதியில் இருந்த மிதிவெடிகள் அகற்றப்பட்டபோதிலும் வீதி செப்பனிடப்படாமையால் மக்கள் போக்குவரத்து செய்யமுடியாத நிலைமை காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் இப்பகுதியில் அமைந்துள்ள காணிகளுக்குச் சென்ற மூவர் மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்துள்ளதுடன் 25இற்கும் மேற்பட்ட மாடுகளும் படுகாயமடைந்துள்ளன.

இந்நிலையிலேயே இப்பகுதியில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றி மக்கள் குடியேற வசதிசெய்து தரும்படி மகஜர்மூலம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

ஏற்கனவே இப்பகுதியில் சில இடங்களில் குடியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-86)

## ஆனைக்கோட்டை ஆலயத்தில் திருட்டு!

நவாலி,செப்.25

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய ஜன்னலை உடைத்து உள்நுழைந்தவர்கள் 3லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு ஆலயப் பூந்தோட்டப் பகுதிக்குள் நுழைந்த திருடர்கள் ஆலயப் பின்புறச் சுவரில் இருந்த ஜன்னலின கம்பியை வளைத்து உள்ளே இறங்கி கிரீடங்கள், சடை நாகம், வேலாயுதம் உட்பட பல பொருள்களை எடுத்துச் சென்றுள்ளதாக மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் ஆலய நிர்வாகம் முறைப்பாடு செய்துள்ளது. (ஓ-102)

## யாழ். சாவகச்சேரி மினிபஸ் சேவை

தென்மராட்சி,செப்.25

சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கான மினி பஸ் சேவை நேற்றுமுன்தினம் முதல் தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தினால் தற்போது கொடிகாமத்திலிருந்து சாவகச்சேரி ஊடாக யாழ்ப்பாணம் வரை நடத்தப்படும் பஸ் சேவைகள் தொடர்ந்து நடைபெறுமென சங்கத் தலைவர் மெ.அற்புதராசா தெரிவித்தார்.

இடம்பெயர்வுக்கு முன்னர் சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து அரை மணித்தியாலத்துக்கு ஒன்று என்ற ரீதியில் யாழ்ப்பாணத்துக்கு பஸ் சேவை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-117)

### மாணவர் போராட்டம் தொடர்பாக

# கைதான கடற்றொழிலாளர் பிணையில் செல்ல அனுமதி

கரவெட்டி,செப்.25

பருத்தித்துறை மெதடிஸ் மற்றும் ஹாட்லிக் கல்லூரிகளின் மாணவர்களால் நடத்தப்பட்ட வீதி திறப்பு எழுச்சிப் போராட்டம் தொடர்பாக பொலீஸாரால் கைதுசெய்து தடுப்புக் காவலில் கடந்த இரு வாரகாலமாக வைக்கப்பட்டிருந்த கடற்றொழிலாளர் மூவர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மேற்படி எழுச்சிப்பேரணியின்போது நடைபெற்ற அசம்பாவிதங்களுக்கு காரணமானவர்களென சுப்பர்மடம் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் உட்பட மூவர் பருத்தித்துறை பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவுப்படி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

விக்னராசா, ஜெயரட்ணம், உதயகுமார் ஆகிய மூவரும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் அ. பிரேம்சங்கர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

விசாரணையை மேற்கொண்ட நீதிவான் அவர்கள் மூவரையும் தலா 5 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 10 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் செல்ல அனுமதித்ததுடன் மீண்டும் இவர்கள் சம்பந்மான விசாரணை அடுத்தமாதம் 18ஆம் திகதி மேறகொள்ளப்படும் என அறிவித்தார். (ஓ-70)

# தென்மராட்சி ஆசிரியர்களுக்கு சம்பள நிலுவை வழங்க நிதி

தென்மராட்சி,செப்.25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பதவியுயர்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்களுக்கு விரைவில் சம்பள நிலுவை வழங்கப்படவுள்ளது.

நிலுவை வழங்குவதற்கென 55 லட்சத்து 53ஆயிரம் ரூபாவினை வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைத்துள்ளது.

வலயப் பாடசாலைகளில் பதவி உயர்வு பெற்ற ஆசிரியர்களுக்கு இரு மாதங்களுக்கு முன்னர் சம்பள நிலுவையின் ஒரு பகுதி வழங்கப்பட்டது. (ஐ-117)

## ஈ.பி.டி.பி. கண்டனம்

யாழ்ப்பாணம்,செப்.25

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் எஸ்.ஸ்ரீபதி கடந்த சனிக்கிழமை இனந்தெரியாதோரால் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு ஈ.பி.டி.பி. அமைப்பு கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக, ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். (ஓ-8)

## தியாகத் திருவுருவே.....



### தாகத்துடன் நடத்திய யாகம்

எட்டுத் திக்கும் நீ ஏறிய மேடையால்
எட்டப்பன் கூட்டங்கள் ஓடிமறைந்தன!
களத்தில் உன் நாமம் கேட்ட கயவர்கள்
கதி கலங்கியே ஓட்டம் எடுத்தனர்!

தலைவன் ஆணையில் தாய் மண் காத்திட
தாகத்துடனே நடத்திய யாகத்தால்
தங்கமேனியும் நொந்து போனதே
தாயக மூச்சது நின்று போனதே!

காந்தியின் நாட்டவர் கருணை காட்டுவரென
காத்திருந்து உம்முடல் கனலாய் போனதே
கட்டிய மேடையில் கண்டவர் கலங்கிட
காற்றிடை உம்முயிர் கலந்து போனதே!

அன்னை மண்ணுக்கு அஹிம்சை வழியினில்
அகிலம் புகழ்ந்திட அடித்தளம் நீ இட்டு
ஆண்டுகள் பதினைந்து ஓடியே சென்றன
அடிமை வாழ்வது ஓடட வில்லையே!
- இணுவையூர் சேது.

### சரித்திரம் படைத்தவனே!

வரெழுவில் உதித்தவனே! உதயத்துச் சூரியனே!
விடியலைத் தேடியவனே! வேள்வித்தீயில் வெந்தவனே!
பண்பில்லாப் பாரதத்தின் பாதகச் செயல்கள் தனை
பார்த்து நின்றவனே! பதைபதைத் தெழுந்தவனே!
பொங்குதமி ழிற்குச்சங் காரம் நிஜ மெனில்
சங்கே முழங்கெனச் சரித்திரம் படைத்தவனே!
பன்னிரு நாள் தனிலே நீ பட்ட துயரமெல்லாம்
பனி போல் விலகும்நாள் பார்த்திடுவாய் பார்த்தீபனே!
- கவிஞர் சரசாலையூரான்.

### அமரனே திலீபன்!

இதிகாசம் புராணம் பகன்ற செய்திகள்
ஈழத்தி லின்று நிகழ்வ தற்புதம்
கர்னனை விஞ்சிய கொடைத்திற மிங்கு
கந்த னடியில் நிகழ்ந்ததைக் கண்டோம்!

அன்னையாம் தமிழுக்கு ஆபரண மாகவே
ஆருயிர் தன்னையே அர்ப்பண மாகிய
அஹிம்சை வேள்வியில் ஆகுதி யாகிய
அகிலத்தில் உதித்த அமரனே திலீபன்.
- சுன்னாகம் கு.சிவகுமார்.

### திலீபத் தீ!

சூரியப் புதல்வன்
நெருப்பின் தலைவன்
மொத்தத்தில் இவன்
சுதந்திரப் பிரியன்
இவன் குனிந்தான்
தமிழினம் நிமிர்ந்தது
இவன் எரிந்தான்
தமிழீழம் தெரிந்தது
இவன் இதயப்பை
தமிழின கர்ப்பப்பை
மரணம் அழைக்கின்ற
மனிதர்கள் நாம்
மரணத்தையே அழைத்த
மகாத்மா இவன்
விடுதலை மரத்திற்கு
உயிர் நீர் ஊற்றினான்
அந்த நிழலில்
இன்று நாங்கள்
சுகமாக ...
கே.திருமுருகன்
கல்விக் கல்லூரி.

## அறிவித்தல

தியாகி திலீபனின் நினைவுநாள் இறுதி நிகழ்வில் கலந்துகொள்ளும் பொருட்டு யாழ்.குடாநாட்டின் சகல ஓட்டோக்களும், வாடகைக் கார்களும் நாளை (26.09.2002) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு எமது சங்கக் காரியாலயத்திற்கு சமுகந்தரவும்.

வட பிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கம்,
வாடகைக் கார்ச் சங்கம்,
யாழ்ப்பாணம்.
(8701)

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் ஆதனவரி அறிவித்தல்-2002

2002 ஆம் ஆண்டு மூன்றாம் கந்தாயத்துக்கான ஆதனவரியை 30.09.2002 பிற்பகல் 3.30 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி இவ்வலுவலகத்தில் செலுத்தலாம் எனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ் விவரப்படி வெலியாற்றுப்பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகிறேன்.

| | |
|---|---|
| வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் | 15% |
| ஏனைய காணிகள் | 20% |

நிலுவை உட்பட 2002ஆம் ஆண்டுக்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

குறித்த நிலுவையைச் செலுத்தாத பட்சத்தில் மாநகர சபைக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252 பிரிவு XII, 252(1) இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

காசோலையாகச் செலுத்துவோர் "மாநகர ஆணையாளர் - யாழ்ப்பாணம்" என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
24.09.2002

இ.இராமலிங்கம்,
*மாநகர ஆணையாளர்,*
*யாழ்ப்பாணம்.*
(C/23950)

## வாழ்த்துகின்றோம்



எமது வித்தியாசாலையின் உப அதிபரும், மூத்த ஆசிரியரும், யாழ்.மாவட்ட சாரணிய ஆணையாளருமாகிய

### திருமதி கி.சிவராஜா

அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 2-Iஇற்கு பதவிஉயர்வு பெற்றமையையிட்டு அவரை மன மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

யா/பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை, சுழிபுரம்.
(8695)

## ஆன்மீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,செப்.25

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.பிராந்திய அலுவலகம் நடத்திவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில், நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு 'சமய வாழ்வு' என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி ப.கோபால கிருஷ்ண ஐயர் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் உள்ள நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு இந்துசமய விவகார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் தலைமை தாங்கவுள்ளார். (ஓ-9)

## மனைவியை தேடி சென்றவர் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம்,செப்.25

குடும்பத்தகராறு காரணமாக வீட்டைவிட்டு வெளியேறிய மனைவியைத் தேடிச் சென்ற நபர் அடித்தும், கத்தியால் குத்தப்பட்டும் படுகாயமடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

வவுனிக்குளம், கொல்லவிளாங்குளத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் தம்பிராசா ரவீந்திரன் (வயது 30) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

படுகாயமடைந்தவர் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஓ-15)

## அபிவிருத்திச் சங்கங்கள் புனரமைப்பு

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதையடுத்து இப்பகுதியில் உள்ள கிராமிய அபிவிருத்திச் சங்கங்களைப் புனரமைக்கும் பணியினை பிரதேச செயலக கிராமிய அபிவிருத்திப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் கொடிகாமம் தெற்கு, பாலாவி, கொடிகாமம் வடக்கு ஆகிய பகுதிகளில் உள்ள கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச செயலகக் கிராமிய அபிவிருத்தி அலுவலர் இ.பரராசசேகரம் தெரிவித்தார். (ஓ-117)


## யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

கெரிகோல்ட்

இலங்கையின் 'கெரிகோல்ட்' KERRY GOLD

முழு ஆடைப் பால்மாவின் ஏக விநியோகஸ்தர்களான

**DELMEGE DISTRIBUTORS (PVT) LTD.**

நிறுவனத்தின் ஆதரவில் நடத்தப்படும் மாபெரும்

### சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகள்

இது யாழ்.மாவட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் உரியது. இது பாடசாலை மட்டம், தனியார் (கழகங்கள் உட்பட) மட்டம் ஆகிய இரு பிரிவுகளாக நடத்தப்படும்.

நடைபெறும் திகதி: 12.10.2002 சனிக்கிழமை மு.ப. 7.00 மணி (S.L.T.)

போட்டிகள் ஆரம்பிக்கப்படும் இடம்:

### யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

விண்ணப்பங்கள் உடனடியாகக் கோரப்படுகின்றன.

தனிநபர்களாயின் நேரடியாகவும், பாடசாலை மாணவர்களாயின் அதிபரூடாகவும்

அதிபர், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, கோப்பாய்.

என்னும் முகவரிக்கு 5.10.2002 சனிக்கிழமைக்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்.

### பரிசில்கள் கவர்ச்சிகரமானவை

N.சிவகடாட்சம்
அதிபர்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

F.A.சில்வெஸ்டர்
செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

க.றெங்கநாதன்
மாவட்ட முகாமையாளர் (டெல்மேஜ்)
போட்டி ஒருங்கிணைப்பாளர்

(8691)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன்

### செல்வன் வி.தீபன்ராஜ்

அவர்கள் 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை 2002 இல் 162 புள்ளிகளைப் பெற்று விசேட சித்தி பெற்றமைக்காகவும் யாழ்.மாவட்டத்தில் 9ஆவது தகுதி நிலையை அடைந்தமைக்காகவும் அவரைப் பாராட்டுவதுடன் கல்வி கற்பித்து அறிவூட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும் பிரத்தியேகமான முறையில் கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கும் நன்றிகள் கூறி அவர் குடும்பத்தினருக்கும் எமது மனமகிழ்ச்சியைத் தெரிவித்து வாழ்த்துகின்றோம்.

*பருத்தித்துறை வீதி,*
*ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.* (8703)

- குடும்ப நண்பர்கள்.

## பிரிவுத்துயர் பகிர்வு

எமது பாடசாலை ஆசிரியை

திருமதி ம.சிவசிதம்பரலிங்கம் அவர்களின் அன்புத் தந்தையார்

### சிவக்கொழுந்து ராஜா

அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

*யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.* (8693)

## மரண அறிவித்தல்கள்

### பவுலிஸ் அப்புகாமி (சாரதி)

யாழ்ப்பாணம், குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பவுலிஸ் அப்புகாமி நேற்று (24.09.2002) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வவாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகிபாலா (புத்தா), சந்திரா (உடுப்பிட்டி), தர்மா (இந்தியா), அனுரா (பிரான்ஸ்), ஜயந்தா (பிரான்ஸ்), காலஞ்சென்ற றொபின்சன் மற்றும் ஜொபிற்றா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரா, டுசி (பிரான்ஸ்), டொரின் (பிரான்ஸ்), றோபேட் (உடுப்பிட்டி), திருச்செல்வராசா (இந்தியா), கலாநாதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2002) புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.03, புதிய வீடமைப்புத்திட்டம்,*
*குருநகர், யாழ்ப்பாணம்.* (C/23952)

தகவல்:
திருமதி பவுலிஸ் வவா (மனைவி)

### திருமதி ஜோசப் அகத்தம்மா (தங்கம்)

சில்லாலையைச் சேர்ந்த திருமதி ஜோசப் அகத்தம்மா (தங்கம்) அவர்கள் 22.09.02 ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.09.2002) புதன்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு (புதிய நேரம்) கதிரை மாதா கோயிலில் இரங்கற் திருப்பலியின் பின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சில்லாலை.* (8699) தகவல்: ஜோசப் (கணவர்)

### திருமதி மார்க்கண்டு நாகம்மா (சங்கானை)

பிளாக் வீதி, சங்கானையைச் சேர்ந்த திருமதி மார்க்கண்டு நாகம்மா 24.09.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புக்குட்டி மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் மலர்தேவி, மகேந்திரன்(கட்டட ஒப்பந்தகாரர்), மாலினிதேவி, இரஞ்சினிதேவி, மகேஸ்வரன்(அமெரிக்கா), மதிவண்ணன்(அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும் வெற்றிவேல்(சவூதி), செல்வநாதன்(வவுனியா), புலேந்திரன், டயானி(ஜேர்மனி), வசந்தமலர்(கனடா) ஆகியோரின் அருமை மாமியாரும் கமலகீதன்(லண்டன்), காஞ்சனா, நளினி, தனுஷன் (இருவரும் மெமோறியல் ஆங்கில பாடசாலை), விதுஷன், ரசு(இருவரும் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்), விஷியா (வவுனியா), மதுஷா (ஜேர்மனி), ஜெனா(வவுனியா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.09.2002) புதன்கிழமை நண்பகல் 12.00மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

*பிளாக் வீதி, சங்கானை.* (C/23953) தகவல்: மகேந்திரன (மகன்)

### நாகராஜா ஸ்கந்தராஜா (ராஜன்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் இல.35, 42ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் Mascons Ltd. இல் தொழில் புரிந்தவருமான நாகராஜா ஸ்கந்தராஜா (ராஜன்) 23.09.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், Mascons Ltd. & Asbestos Cement Industries Ltd. ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளரான நாகராஜா - கமலாசினி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் மாதினி அவர்களின் அன்புக் கணவரும், கீர்த்தனா, ஸ்கன்டீஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவானந்தன் - நவமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், நகுலேஸ்வரன்(இலங்கை), விஜயநாதன்(Swiss), உமாவதி(Hong Kong), லோகநாதன்(UK), உஷாவதி(UK), சுவன்யாதேவி(UK), உருத்திரகுமார் (Australia), நிலாமதி (Australia), கணேஷராஜ்(UK), இரவீந்திரன் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.09.2002) புதன்கிழமை காலை 8.00 மணிமுதல் A.F Raymonds மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கனத்தை பொதுமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.35, 42ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை.
தொலைபேசி - 581887/363104. (C/23951)

தகவல்:
ந.நகுலேஸ்வரன்.

# வரலாற்றுச் சிக்கலை உருவாக்கப்போகும் கலைப்பொருள் சரண்டல்!

இன்று கொழும்பு போன்ற பெரு நகரங்களில் காணக்கூடிய விடயங்களில் ஒன்று எமது பழைய வீட்டு கேற்றுகள், தூண்கள் கூரையமைப்புகள், சரவிளக்குகள், தளபாடங்கள் போன்றவைபோல வடிவமைக்கப்பட்ட புதிய பொருள்கள் பாவனைக்கு வந்திருப்பதாகும். இவற்றை மரத்தினாலும், உலோக மற்றும் 'கொங்கிறீட்' அச்சுகள் மூலமும் தயாரித்து வழங்க பல சிறு கைத்தொழில் நிறுவனங்கள் கொழும்பின் சுற்றுப்புறங்களில் உருவாகி வருவதையும் கவனியாது இருந்திருக்க முடியாது. அதாவது, எங்களால் பழம் பொருள்கள்,

அவர்களிடம் தமது குடும்ப, ஊர் வரலாற்று ஞாபகப் பொருள்கள் இல்லை. அவற்றைத் தமது புதிய பணத்தால் வாங்கித் தங்களை பண்பாடும், உயர்ந்த கலைநயமும் மிக்கவர்களாக மற்றவர்களுக்குக் காட்டிக்கொள்கிறார்கள். இதன்மூலம் இச்சமூகத்தின் மீது தமது பண்பாட்டு மேலாண்மையையும், அதிகாரத்தையும், அந்தஸ்

வைத்திருந்த பழைய புழுதி மண்டிய பெட்டகங்கள் மினுக்கப்பட்டு புதுப் பொலிவுடன் மெத்தைகள், புத்தகங்கள், குழந்தைகளின் விளையாட்டுப் பொருள்கள், விலைமதிப்புள்ள ஆடைகள் வைக்கப் பயன்படுத்தப்படுகின்றன. எமது பழைய மர அலுமாரிகள் CD Player, CD தட்டுக்கள் வைக்கும் ஓர் அமைப்பாகப் பயன்படுத்தப் படுவதை நான் கண்டு அதிசயித்தேன். இதேபோல் மன்னாரில் உள்ள தேவாலயங்களில் இருந்து எடுக்கப்பட்ட கிறிஸ்தவ சொருபங்களை ஒரு விருந்தினர் மாளிகையில் அலங்காரமாக வைத்திருந்தார்கள். எமது கோயில் யாழிகள் மதுசாலை முகப்பை அலங்கரித்திருப்பதாக நண்பர் ஒருவர் குறிப்பிட்டார். இந்த வழிகளில் மேட்டுக்குடியினரிடம் எமது அரும் பொருள்கள் புதிய பாவனை முறையையும் அழகியல் பெறுமானத்தையும் ஏற்றுவருகின்றன.

எமது கல்வி முறையும் அதனூடு வளர்த்தெடுக்கப்படுகின்ற சிந்தனை ஆற்றலும் எங்களைப்பற்றியும், எங்களைச் சூழவுள்ளவை பற்றியும் கட்டம் கட்டி வரையறைக்குட்பட்டு நோக்கவே எங்களைப் பழக்கியுள்ளன. அதனால், எமக்கு கோயில் வாகனம் என்றால் 'சாமி காவ' பயன்படுவது என்றே அர்த்தம் தரும். அதன் வடிவ ஒழுங்கும் வெளிப்பாட்டுத்திறனும் எமது கண்களால் காணப்படுவதில்லை. ஒரு பெட்டகம் நெல்லுப்போட்டு வைப்பது, கனம் காத்திரமான மரத்தினால் செய்யப்பட்டது என்பது தவிர வேறு என்ன அர்த்தத்தைப் பெறமுடியும். பெரிய வேலைப்பாடுகள் உள்ள கதவு நிலைகள், கதவுகள், தூண்கள் அவற்றின் அழகிற்காக எங்களால் நோக்கப்படாததினால்தான் மரதட்டுப்பாட்டிற்கு அவற்றைப் பிடுங்கி பலகைக்கட்டைகள் செய்தோம்.!

தொடர்ந்த வெளியார்களின் தலையீடும், அதனைப் பல்வேறு கலாசாரங்களின் மோதுகைக்கான நிலமாக மாற்றியுள்ளது. இந்த மோதுகைகள் அதில் பல தனித்துவமான பண்புகளை ஏற்றியுள்ளதை யாரும் மறுப்பதற்கில்லை. இந்தத் தனித்துவங்கள் பதியப்பட்ட ஆவணங்களாக இந்தத் தொல் பொருள்களும் அரும்பொருள்களும் காணப்படுகின்றன. எனவே,

ஒருசில தனிநபர்களின் முயற்சியால் கோர்க்கப்படாத எமது வரலாறு பற்றிய தடயங்களும், தகவல்களும் கட்டியுள்ளன என்றாலும் இந்த ஆய்வுகள் தொடரப்பட இந்த எச்சங்களின் தொடர்ந்த இருப்பு இந்த மண்ணில் உறுதிப்படுத்தப்படவேண்டும். இது சமூகத்தின் எல்லாப் பிரிவினரது வரலாற்றுத் தேவையும், தேச கடப்பாடு மாகும்.

இவ்வாறு போரில் எஞ்சிய எமது மூதாதையரின் கடைசிச் சுவடுகளை இன்று தென்பகுதி தரகர்களுக்கும் சுரண்டல் பேர்வழிகளுக்கும் விற்போமானால் நாங்கள் ஆட்டுமந்தைகளாக நடத்தப்படுவோம். ஆயுதப் போராட்டத்தாலும், அதிகாரப் பரவலாக



பழைய வீடொன்றின் தூண்போதிகை



பழையகால வடிவமைப்பில் அமைந்துள்ள தற்காலத் தளபாடங்கள்

பட்டிக்காட்டுத் தனமானவை, நவீனமற்றவை, சுமையாக இருப்பவை, இன்றைய தேவைக்கும் நாகரிகத்திற்கும் ஏற்பற்றவை என்று கோடியில்போட்ட பொருள்களை நூற்றுக்கு நூறுவீதம் ஒத்தபொருள்கள் தென்பகுதி மத்தியதர வர்க்க வீடுகளை நிறைத்து வருகின்றன. இதுதான் இன்று அங்குள்ள பாஷன் (Fashion). இதைக் காலனித்துவ பாணி (Colonial Style) என்கிறார்கள்.

இது ஒரு பக்கமிருக்க பெருநகரங்

தினையும் நிறுவிக்கொள்கின்றார்கள். மறுதலையாக எங்களைப்போன்று வரலாற்று, பாரம்பரிய பிரக்ஞை குன்றிய, அவற்றை கோஷங்களால் உருவாக்குகின்றவர்களிடமிருந்து இவ் அரும்பொருள்களை வாங்கி தமது புதிய வரலாற்றினைக் கட்டியமைக்கின்றார்கள். அந்தவகையில் எங்களைப்போன்ற பல பொதுத்தன்மைகள் காணப்படுகின்ற இருவேறு இனங்களின் முரண்பாட்டுப் பின்னணியில் இக்கலைப் பொருள் சுரண்டல் என்

இவற்றின் பழைமையுடனும், அலங்காரங்களுடனும் எமது முன்னோர்களின் வாழ்க்கை முறையும், பொருளாதார வலிமையும, செயற்றிறனும், கைவினை நுட்பமும், வெளித்தொடர்புகள் பற்றிய தகவல்களும் உறைந்துபோயுள்ளன. மொத்தத்தில் எமது தேசத்தின் வரலாறும், பண்பாட்டின் அடையாளமும் எதிர்காலப் பண்பாட்டின் ஊக்கியும் இந்த அரும் பொருள்கள்தான். இவை தொடர்ந்த போர்களிலும் அந்நியர் ஆதிக்கத்திலும் இந்த மண்ணில் அழிக்கப்பட்டும், அகற்றப்பட்டும் வந்ததினால் இன்று எமது பிள்ளைகள் கற்க, போற்ற, நம்ப எமக்கு மற்றவர்களுக்கீடான சான்றாதாரங்களுடன் கூடிய வரலாறு இல்லை. அத்துடன் எமது வரலாறு புராணக்கதையாகவும் மாற்றப்பட்டு வந்துள்ளது.

இந்த மண் எம் மூதாதையருக்கு உரியது என்று மேடைகளைக் கண்டால் முழங்கும் நாம், அதற்கான ஆதாரங்களாக எவற்றைக் கொள்கிறோம் என்பதும் அவற்றைக்காப்பாற்ற, செயற்பாடு என்றவகையில் என்ன நடவடிக்கையெடுத்தோம் என்பதும் கசப்பான கேள்விகள்தான்.

கத்தாலும் கிடைக்கின்ற எழுத்துமூலமான உறுதிப்பாடு எமது சுயமரியாதையையும், அடையாளத்தையும், சம அந்தஸ்தையும் பெற்றுத்தரப் போதுமாகாது. ஏனெனில், எட்டியுள்ள உடன்பாட்டின் செயற்பாடு தென்பகுதியினருக்கு சமமான பண்பாட்டு வலுவாலும் வரலாற்று உண்மைகளாலும் தீர்மானிக்கப்படும். இதுதான் சமத்துவ

## வடக்கும் தெற்கும் அரும்பொருள்களும்...

களிலுள்ள மேட்டுக்குடியினர், செல்வந்தர்கள் என்போர் தமது நாளாந்த பாவனைக்காகவும் வீடுகளை அலங்கரிக்கவும் எம்மால் கைவிடப்பட்ட அரும்பொருள்களை சேகரித்து வருகின்றார்கள். அவற்றை அவற்றின் வரலாற்றுப் பழைமைக்காகவும், வடிவமைப்பு, அழகியல் பெறுமானங்களுக்காகவும் பெருந்தொகைப் பணத்தில பெருநகரங்களிலுமுள்ள அரும்பொருள் சந்தைகளிலிருந்து வாங்கி வருகிறார்கள். அதாவது அவர்களிடம் பணமும், புதிய செல்வாக்கும், தொடர்புகளும் இருக்கிறது; ஆனால்,

பது பாரிய வரலாற்றுச் சிக்கல்களை எதிர்காலத்தில் உருவாகும். இந்த பாரம்பரிய வரலாற்றுச் சிக்கலுக்கு ஏற்கனவே நாங்கள் முகங்கொடுத்தும் வருகின்றோம். இது எங்கள் இனத்தை பண்பாடும் வரலாறும் அற்ற குடியேறிகள், நாடோடிகள் என்ற அவர்களின் கூற்றை மேலும் வலுப்படுத்துவதாக அமையும். அதே வேளை, தென்பகுதியில் இருந்து எந்தவிதமான அரும்பொருள்களும் யாழ்ப்பாணம் நோக்கி வருவதில்லை என்பதும் கவனத்திற்குரியது.

நாங்கள் தானியங்கள் சேகரித்து

ஓர் இனம் குறித்த ஒரு காலத்தில் - குறித்த ஒரு புவியியல் பின்னணியில் - தான்பெற்ற அனுபவங்களினூடு தனது தேவைக்கான பொருள்களை உற்பத்தி செய்கிறது. ஆகவே, அந்தப் பொருள்கள் அவை எழுந்த காலத்தின் குறியீடுகளாய், பிரதியீடுகளாக அமைகின்றன. இதனால் வரலாற்றாசிரியர்களும், சமூகவியலாளர்களும், அழகியலாளர்களும் குறித்த இனம் பற்றிய முடிவுகளுக்கான முக்கிய ஆதாரங்களாக இவற்றைக் கொள்கிறார்கள். யாழ்ப்பாணத்தின் புவியியல் அமைவிடமும்,

**தா.சனாதனன்**

மான மனநிலைகளை உருவாக்கும். நாங்கள் எமது வரலாற்று ஆவணங்களான அரும்பொருள்களை தவறவிடுவோமானால் தொடர்ந்தும் இந்த நிலத்தில், எமது தாய் மண்ணில் குடியேறிகளாகவும், நாடோடிகளாகவும், காட்டுமிராண்டிகளாகவும் கொள்ளப்படுவோம்.

எனவே, இது பற்றிய ஒருங்கிணைந்த, நிறுவமைப்பட்ட சமூக நடவடிக்கை என்பதும், இதுபற்றிய விழிப்புணர்வு என்பதும் இன்றைய தேவையாகும். இது சமூக, பண்பாட்டில் அக்கறைகொண்ட அனைவரின் கவனத்திற்குரியதொன்றுமாகும். ☆

# திலீபன் நினைவுதினப் போட்டிகளில் தென்மராட்சியில் வெற்றி பெற்றோர்

தென்மராட்சி,செப்.25

தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 15ஆவது நினைவு தினத்தையொட்டி வலிகாமம் தென்.கிழக்கு பொது அமைப்புகளின் ஒன்றியத்தினால் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே அண்மையில் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, பேச்சு, சதுரங்கம் ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இப்போட்டிகளில் முறையே முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

**கவிதைப் போட்டி**

*பிரிவு I (தரம் 10, 11)* இ.கினித்தா (மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்), சு.விஜயராஜ் (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), சி.பத்மஜா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்).

*பிரிவு II - (தரம் 12, 13)* த.பிரபாசினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), க.வானதி - (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), செ.பார்வதி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

*பிரிவு III (பொது)* க.கௌசிகா (கச்சாய் அ.த.க.பாடசாலை), ஜெ.மினேஸ் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி.வதனா (கச்சாய் அ.த.க. பாடசாலை).

**கட்டுரைப் போட்டி**

*பிரிவு I (தரம் 10, 11)* செ.செந்தூரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ம.சுஜீதா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), க.யோகலட்சுமி (பளை மத்திய கல்லூரி).

*பிரிவு II (தரம் 12, 13)* ம.யர்ஷா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்), உ.புவிதா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), க.சுதாமதி (பளை மத்திய கல்லூரி).

**பேச்சுப் போட்டி**

*பிரிவு I (தரம் 10, 11)* யோ.மேனகா (விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்), ச.கீர்த்திகா (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), ந.சுதாஜினி (விடத்தற்பளை கமலாசனி வித்தி.).

*பிரிவு II (தரம் 12, 13)* ச.ஜெயகுமாரி (பளை மத்திய கல்லூரி), க.நீலஜா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்), மா.மதிவாணன் (உடுவில் இராமநாதன் மகா வித்தியாலயம்).

*பிரிவு III (பொது)* சி.பரதன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ந.செந்தமிழ்ச்செல்வன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ந.புஷ்பம் (விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்).

**சதுரங்கம்**

*தரம் 9, 10, 11 (ஆண்கள்)* - முதலாம் இடம்பெற்ற இருவர் க.சசிமாறன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), க.பிரசாந்த் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) மூன்றாம் இடம் செ.கஸ்தூரன் (விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்).

*(பெண்கள்)* த.தனுஷா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ச.சுகுணா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சு.தர்ஷி (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்).

*தரம் 12, 13 (ஆண்கள்)* முதலாம் இடம் பெற்ற இருவர் சரஞ்சித் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ப.அச்சுதன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), 3ஆம் இடம் இ.இராசகுலன் (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)

*(பெண்கள்)* மூ.மீரா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), து.துஷ்யந்தினி (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), மா.நிலோஜனா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி). (ஒ-117)

# முதல்வர் தலைமையிலான குழு தென்பகுதிக்கு அமைதிப் பயணம்

யாழ்ப்பாணம்,செப்.25

யாழ்.மாநகரசபை முதல்வர் செ. கந்தையன் தலைமையில் 50பேர் கொண்ட குழுவொன்று சமாதான யாத்திரையை மேற்கொண்டு அடுத்த மாதம் 15ஆம் திகதி தென்பகுதிக்குச் செல்லவுள்ளது.

இக்குழுவில் முதல்வர் சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இக்குழுவினர் தென் பகுதியில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்குச் சென்று அவற்றின் நிர்வாக முறைகள் மற்றும் செயற்பாடுகள் பற்றியும் கண்டறியவுள்ளனர்.

இதேவேளை -

கோட்டே ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாநகரசபை ஊழியர்களுக்கும் யாழ். மாநகரசபை ஊழியர்களுக்கும் இடையிலான சிநேகபூர்வ காற்பந்தாட்டப் போட்டியொன்று அடுத்த மாதம் 13ஆம் திகதி யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இதற்கென ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாநகரசபையின் ஊழியர்கள் குழுவொன்று அடுத்த மாதம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளது.(ஒ-10)

## செஞ்சிலுவைச்சங்க மாத்தளைப் பிரிவு யாழ். வருகிறது

தென்மராட்சி,செப்.25

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மாத்தளைப் பிரிவினர் குடாநாட்டில் மீளக்குடியமர்ந்துவரும் மக்களுக்கு அத்தியாவசிய தேவைப் பொருள்களை வழங்க விரைவில் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர்.

யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென தென்னிலங்கை மக்களுக்கு ஆர்வம் உள்ளபோதிலும் யாழ்ப்பாணம் வருவதற்கு ஏற்பட்டுள்ள பய உணர்வு காரணமாக மக்கள் செல்லத் தயக்கம் காட்டியதாகவும் -

தற்போதைய சமாதான சூழ்நிலையில் வடக்கு, தெற்கு மக்களிடையே ஏற்பட்டுள்ள சந்தேக உணர்வுகள் நீங்கியுள்ளதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிசெய்ய யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதாகவும் - அவர்கள் தெரிவித்ததாகக் கூறப்பட்டது. (ஒ-117)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மல்லாகம் சந்திக்கும் கே.கே.எஸ். வீதிக்கும் மிக அண்மையாக சோடாக் கொம்பனி ஒழுங்கையில் 51/2 பரப்புக் காணியில் ஆறு அறைகளும், தனிக் கிணறும் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி.சிவநேசன், கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (8641)

கொடிகாமம், பருத்தித்துறை வீதியில் (18பரப்பு) பயன்தரும் மரங்களுடன் சகல வசதிகளும் கொண்ட கல்வீடும் காணியும் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு. தொடர்பு: 70(34), கோயில் வீதி, யாழ்ப்பாணம். (8674)

**21" Sony Clolur stereo T.V, Deck (Japan)** என்பன மலிவான விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: உ.பாலசுப்பிரமணியம், துன்னாலை மத்தி, கரவெட்டி. (8649)

பிறீமா பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் 27.09.2002 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும் தொடர்பு: றாஜீ, ஆனைக்கோட்டைச் சந்தி. **T.P No.** 3529, 2867. (8655)

**M.BX** 125 மோட்டார் சயிக்கிள் விலை 35,000/- ரூபா உரிய சான்றுகளுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ரஞ்சித், இல.54, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (8673)

**Sony T.V K.V 2192, Sony T.V. 2032, National T.V T.C 2070** என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி.பிறேம், இல.45, பூங்கா வீதி, குருநகர். (8688)

## காணியும் வீடும் விற்பனைக்கு

மாவடிச் சந்தியில் இருந்து செல்லும மூளாய் வீதியில் 200யார் தொலைவில் சுப்பிரமணிய வித்தியாசாலைக்கும் பஸ் போக்குவரத்துக்கும் இடையில் 7 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: R. பொன்னுராஜா, வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை. (8676)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

**Broiler** மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் காலை 6 மணி தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம் (**Electronic** நிறுவை). தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (8684)

## வீடு தேவை

திருநெல்வேலி, கோண்டாவில், கல்வியங்காடு, கொக்குவில் பகுதிகளில் ஏதாவது ஒரு பிரதான வீதிக்கு அண்மையில் வீடு குத்தகைக்கு அல்லது வாடகைக்குத் தேவை. (கூடுதல் குத்தகை தரப்படும்) தொடர்பு: விளம்பர இல. 1656, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (8678)

## பெற்றுக்கொள்ளவும்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வாசலில் 20-09-2002 அன்று நிறுத்தப்பட்டிருந்த லுமாலா லேடீஸ் சைக்கிளைத் தவறுதலாக மாற்றி எடுத்துச் சென்றவர்கள் பே.கணேசலிங்கம், 233/5,கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் கொண்டு வந்து ஒப்படைத்து விட்டுத் தங்களது சைக்கிளைப் பெற்றுக்கொள்ளவும். (8651)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான **Prima Broiler** குஞ்சுகள் அதிவிசேட **Prima** பேட்டுக்குஞ்சுகள் 03.10.2002 வியாழக்கிழமை காலை பெற்றுக்கொள்ளலாம். பதிவுசெய்யவும். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (8682)

## நாடக நூல் விமர்சனம்

24.09.2002 உதயனில் பிரசுரிக்கப்பட்ட அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் எங்கள் நாடு நூலுக்கு கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரை எழுதிய விமர்சனத்தை வாசியுங்கள். நீங்களும் நாடக நூல் விமர்சனம் எழுதக் கற்கலாம். (8679)

## தவறிவிட்டது

செல்லன் ரவிச்சந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.710341338V) குளப்பிட்டிறோட்டுக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டுஎடுத்தவர்கள், உரும்பிராய் கிழக்கு செல்வபுரம், முகாமில் ஒப்படைத்து உதவவும். (8644)

யாழ்ப்பாணம் பெரியகடைப் பகுதியில் வரதராசா கிஷோக்குமாரின் தேசிய அடையாள அட்டை (இல. 811035190V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுதுமலை தெற்கு மானிப்பாய் என்னும் முகவரியில் தொடர்புகொள்ளவும். (8667)

30/1, முள்ளிவீதி, அரியாலையைச சேர்ந்த ஆனந்தராசா நிலந்தி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.736773066X), விசேட அடையாள அட்டை (இல.0902031381) என்பன தட்டாதெருவுக்கும் கஸ்தூரியார் வீதிககும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 'ஞானம் அழகுமாடம்', 87, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (8677)

## AMERICAN VISA

DV - 2004, அமெரிக்க சீட்டிழுப்பு விசாவுக்கான விண்ணப்பங்கள் சரியான விதி முறைகளின்படி தயாரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு: சண், 345, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை, சுன்னாகம். (8685)

## மாணவர்களுக்கு கண் சிகிச்சை

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கான இலவச கண் பரிசோதனை முகாமினை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் விரைவில் நடத்தவுள்ளது.

அண்மையில் யாழ்.போதனா வைத்தியசாலை கண்சிகிச்சைப் பிரிவுக்கு வழங்கப்பட்ட நடமாடும் கண்சிகிச்சை நிலையத்தின் மூலம் இக் கண்சிகிச்சை முகாம் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

## ஞானச்சுடர் வெளியீட்டு விழா

சண்டிலிப்பாய்,செப்.25

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவக் கலை பண்பாட்டுப் பேரவை மாதந்தோறும் வெளியிட்டு வரும் "ஞானச்சுடர்" இதழின் செப்ரெம்பர் மாத மலரின் வெளியீட்டு விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன் வெளியீட்டுரையை பிரம்மஸ்ரீ கு.தியாகராஜ சர்மா நிகழ்த்துவார். மதிப்புரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறையைச் சேர்ந்த கலாநிதி எஸ்.சிவலிங்கராசா நிகழ்த்துவார். (ஒ-135)

## இலவச சிகிச்சை முகாம்

சண்டிலிப்பாய்,செப்.25

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம், வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கம், வடலியடைப்பு நலன்புரிச் சங்கம் ஆகியவற்றின் ஆதரவுடன் நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாம் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி முதல் 12 மணிவரை நடைபெறவுள்ளது. வடலியடைப்பு கி.அ.சங்க மண்டபத்தில் நடைபெறும் இம்முகாமில் கண்பார்வை குறைந்தவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படவிருப்பதாகக் கழக செயலாளர் வ.இ.கனகராஜா தெரிவித்தார். (ஒ-135)

## விளையாட்டு மைதானம் அமைக்க நடவடிக்கை

சண்டிலிப்பாய்,செப்.25

மாதகல் கல்வி அபிவிருத்தி சபை மாதகல் கிராமத்தில் பொது விளையாட்டு மைதானம் இல்லாத குறைபாட்டை நீக்குவதற்காக காணி ஒன்றை கொள்வனவு செய்து அங்கு சகல வசதிகளையும் கொண்ட விளையாட்டு மைதானம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

கனடாவிலுள்ள கனடா - மாதகல் நலன்புரிச்சங்கம் இதற்கான நிதியினை வழங்க முன்வந்துள்ளதை அடுத்து விளையாட்டு மைதானத்திற்கான காணி விரைவில் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக மாதகல் கல்வி அபிவிருத்திச் சபையினர் தெரிவித்தனர். (ஒ-135)

# உள்ளூராட்சி அமைப்புக்கான மூலதனநிதி வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம்,செப்.25

யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான இவ்வருடத்திற்குரிய மூலதன நிதி இரண்டு கோடியே 16 லட்சத்து 7 ஆயிரம் ரூபா யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

இந்த மூலதன நிதியானது யாழ். மாவட்டத்திலுள்ள 15 உள்ளூராட்சி மன்றங்களின்கீழ் உள்ள சனசமூக நிலையங்கள், மகப்பேற்று நிலையங்கள், பொது நூலகங்கள் மற்றும் மலசலகூடங்களின் பராமரிப்புக்களுக்கு வழங்கப்படவுள்ளதாக சனசமூக அபிவிருத்தி தலைமை உத்தியோகத்தர் திருமதி த.பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியின் அளவு பற்றிய விவரம் வருமாறு:-

யாழ்.மாநகரசபைக்கு 20 லட்சத்து 5 ஆயிரத்து 670 ரூபா, வல்வெட்டித்துறை நகரசபைக்கு 69 ஆயிரத்து 660 ரூபா, பருத்தித்துறை நகரசபைக்கு 73 ஆயிரத்து 60 ரூபா, சாவகச்சேரி நகரசபைக்கு 13 லட்சத்து 4 ஆயிரத்து 850 ரூபா, வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு 94 ஆயிரத்து 400 ரூபா, வலிகாமம் கிழக்கிற்கு 25 லட்சத்து 2 ஆயிரம் ரூபா.

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு 11 லட்சத்து ஆயிரத்து 800 ரூபா, ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்கு 12 லட்சத்து 6 ஆயிரத்து 600 ரூபா, நெடுந்தீவுப் பிரதேச சபைக்கு 6 லட்சத்து 8 ஆயிரத்து 600 ரூபா, வேலணைப் பிரதேச சபைக்கு 14 லட்சத்து 4ஆயிரத்து 600ரூபா, நல் லூர் பிரதேச சபைக்கு 12 லட்சத்து 6ஆயிரம் ரூபா, பருத்தித்துறைப் பிரதேச சபைக்கு 12 லட்சத்து 3 ஆயிரம் ரூபா, சாவகச்சேரி பிரதேச சபைக்கு 13 லட்சத்து 2ஆயிரம் ரூபா, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்கு 21 லட்சத்து 9 ஆயிரத்து 850 ரூபா, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்கு 15 லட்சத்து 2 ஆயிரத்து 400 ரூபா, வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு 13 லட்சத்து 2 ஆயிரத்து 200 ரூபா வடக்கு - கிழக்கு உள்ளூராட்சித் திணைக்களத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டு அனுப்பப்பட்ட மூலதன நிதி இதுவாகும்.

இதேவேளை, இம்முறை சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படும் நன்கொடை நிதியானது அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை நிதியாக 'அ' தரமுடைய நிலையங்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதமும், 'ஆ' தரமுடைய சனசமூக நிலையங்களுக்கு ஆயிரத்து 200 ரூபா வீதமுமே வழங்கப்பட்டு வந்தது. ஆனால், இம்முறை இந்நிதியானது ஆயிரத்திலிருந்து ஆயிரத்து 400 ரூபாவாகவும் ஆயிரத்து இருநூறு ரூபாவிலிருந்து ஆயிரத்து 600ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-ரி)

## தியாகி திலீபன் நினைவு தின சிரமதானம்

தென்மராட்சி,செப்.25

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 15ஆவது நினைவு தினத்தையொட்டி தென்மராட்சி பிரதேசத்தில் சிரமதானப் பணிகள் மேற்கொள்வதில் மக்கள் ஈடுபட்டு வருவதைக் காணமுடிகிறது.

நேற்றுமுன்தினம் பளைப் பிரதேசத்தில் புலோப்பளை மாதா கோவில் வீதி, அல்லிப்பளை, புலோப்பளை வீதி ஆகியவை துப்புரவு செய்யப்பட்டன. சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சாவகச்சேரி நகர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பொது அமைப்புக்களும் பொதுமக்களும் சிரமதானப் பணியினை மேற்கொண்டனர். (ஒ-117)


**10 வருட சேவை நிறைவில்...**

**வெஸ்ரன் லொட்ஜ்**
**WESTERN LODGE**

270, செட்டியார் தெரு, கொழும்பு - 11
சகல வசதிகளுடன் சௌகரியமாகவும், பாதுகாப்பாகவும் தங்குவதற்கு குறைந்த செலவில் தலைநகரில் தங்குமிட வசதிக்குத் தொடர்புகொள்ளவும்.
தொலைபேசி: 433753, 438570 (C/23945) தொலைநகல்: 332557


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 - 08 - 1946

மறைவு 16 - 10 - 2000

**திருமதி தையல் நாகேஸ்வரி அரியநாயகம்**

*(தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனாவைத்தியசாலை)*

திதி:25.09.2002

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசப்பிணைப்புடனே நீ இருந்தாய்!
துன்பம் பல வந்தபோதும் துணிவுடனே
தூய பணி நீ செய்து வாழ்ந்தாய்!
இன்பம் பலபெற்று உலகுயர வேண்டுமெனும்
உயர்வான சிந்தையுடன் வாழ்ந்தவளே!
அன்பும் உரியார் பிறர்க்கென்ற வள்ளுவனின்
ஈடில்லா இலட்சியத்தில் நீ வாழ்ந்தாய்!

அம்மா! நீங்கள் எமைப் பிரிந்து ஆண்டுகள் இரண்டாகிவிட்டபோதும் உங்கள் பாச நினைவுகள் ஒரு போதும் எம் நெஞ்சை விட்டகலாது.

*191, காதி அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.*

நீங்கா நினைவுடன்
- குடும்பத்தினர்.

(8690)

## யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

### பழைய மாணவர் சங்கம்

### ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2002

எதிர்வரும் **(29.09.2002)** ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இந்த ஆண்டுக்கான பொதுக்கூட்டம் நடைபெறும். இந்தக் கூட்டத்துக்கு அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமுகமளித்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ உறுப்புரிமை பெறாத பழைய மாணவர்களும் அன்றைய கூட்டத்தில் கலந்து உறுப்புரிமையைப் பெறமுடியும்.

- இணைச் செயலாளர்

(8698)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*"அன்னை இல்லம்", 103/1, கோயில் வீதி, நல்லூர் தெற்கு.*

5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை 2002இல்
125 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த
யாழ்புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவி
**செல்வி ச.சரணிகா** அவர்களை
பாராட்டி வாழ்த்துவதுடன்,
அவ்வித்தியாலய அதிபர், வகுப்பாசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கும் எம் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

*வாழ்த்துவோர்:*
அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, பிரான்ஸ் அன்ரி, சித்தப்பா, மாமாமார், அத்தைமார், அக்கா நிருத்திகா, தம்பிமார், மச்சான்மார் ஆகியோர்.

(8692)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2002

| | | | |
|---|---|---|---|
| 01. இ.கேதீஸ்குமார் | 151 | 08. கி.நிறகுலன் | 136 |
| 02. ஆ.அர்ச்சனா | 150 | 09. இ.சோபனா | 134 |
| 03. ச.சமீரா | 150 | 10. சா.அனோஜா | 132 |
| 04. ந.ஜெயப்பிரியன் | 148 | 11. க.இராகுலன் | 126 |
| 05. கு.தர்சிகா | 146 | 12. து.பிரியந்தன் | 122 |
| 06. சோ.வேணுஜா | 145 | 13. சி.கயலக்சுமி | 119 |
| 07. தெ.அஜந்தன் | 145 | 14. வி.சசிகரன் | 119 |

கோட்ட வலய மட்டத்தில் வகை II பாடசாலைகளில் இம்முறையும் தனிப் பெருமையைத் தேடித்தந்த இவர்களையும், வெட்டுப் புள்ளியை அண்மித்த 9 பேரையும் உலக ஆசிரியர் தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடவிருக்கும் நல்வழி காட்டிகளான அதிபர், ஆசிரியர்களையும் மேலும் பணி சிறக்க நீடூழி வாழ எமது மனமார்ந்த நல் வாழ்த்துக்கள்!

(8694) பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## திக்கம் வடிசாலை விவகாரம்:

# கொத்தணியின் ஏற்பாட்டில் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி!

வடமராட்சி,செப்.25

திக்கம் வடிசாலையை மீளளிக்கக்கோரி வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டப் பேரணி இன்று புதன்கிழமை திட்டமிட்டபடி நடைபெறவுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையின் பொறுப்பில் உள்ள திக்கம் வடிசாலையை மீண்டும் வடமராட்சி கொத்தணியிடம் ஒப்படைக்குமாறு கோரி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள தொடர் போராட்டத்தின் முதற்கட்டமாக இப்பேரணி நடத்தப்படுவதாக வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மந்திகை கண்ணகை அம்மன் கோவிலடியிலிருந்து இன்று முற்பகல் 11மணிக்கு ஆரம்பமாகும் இப்பேரணி, பிரதான வீதி வழியாக பருத்தித்துறை பிரதேச செயலகத்தை சென்றடையும். அங்கு பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்படும்.

இப்பேரணியில் கொத்தணிச் சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள், இயக்குநர்சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (ஐ-173)

# அரசமைப்புத் திருத்தங்களை எதிர்த்து 15மனுக்கள்

கொழும்பு,செப்.25

18ஆவது மற்றும் 19ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கு எதிராக மொத்தம் 15மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நேற்று மட்டும் ஒன்பது மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்தத் திருத்தங்கள் சட்டமாவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கு எம்.பிக்களின் ஆதரவு பெறப்படுவதோடு சர்வஜன வாக்கெடுப்புமூலம் மக்களின் அங்கீகாரமும் பெறப்படவேண்டும் என்று உத்தரவிடும்படி இந்த மனுக்களில் கோரப்பட்டுள்ளது. (ஐ)


## இதயபூர்வ நன்றிகள்

அமுதூட்டி நல்லறிவூட்டி
நானிலம் போற்றும் நல்லாசானாய்
வழிகாட்டி வாழ்ந்த - எம்
குடும்பத்தலைமகன்

### அமரர் சுவாம்பிள்ளை இராயப்பு இராஜசிங்கம்

அவர்களின் மரணச் செய்திகேட்டு எமக்கு பல வழிகளிலும் உதவிகள் நல்கியும், நேரில்வந்து எம்துயரில் ஆறுதல் பகன்றும், பத்திரிகை வாயிலாக அனுதாபம் தெரிவித்தும் இறுதிச் சடங்கில் கலந்து எம்முணர்வுகளுடன் ஒன்றித்த வணக்கத்துக்குரிய யாழ். ஆயர், குருக்கள், அருட்சகோதரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உறவினர்கள், நண்பர்கள், பல்வேறு மறைப்பங்குகளின் அன்பர்கள் யாவருக்கும் எம் குடும்பத்தின் சார்பில் நன்றிகளைச் சமர்ப்பிக்கிறோம்.

நாவாந்துறை. (8705) அருட்திரு. இ.பீற்றர் துரைரத்தினம்.

An International Accounting Firm seeks the services of a dynamic and a highly motivated individual to spearhead the operations of their Branch Office in Jaffna.

## MANAGER

Reporting to the Head Office in Colombo, the preferred candidate should possess full or part qualifications in ICA/CIMA with considerable experience in auditing and accounting. Recently retired persons from Government Accountants Service or from Auditor General's Department may apply.

The ideal candidate should be conversant with business activities in the Jaffna District and should be able to identify opportunities to provide professional services.

An attractive remuneration package could be negotiated.

Please apply with a complete resume with contact details of two non-related referees to reach us within 10 days of this advertisement to:

**P.O.Box 1800**
**Colombo.**

(C-23954)

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

நல்ல தேக ஆரோக்கியமும், உடற்கட்டும், 5அடி 5அங்குல உயரமும், க.பொ.த (சா.த)கல்வித் தகைமை உடையவர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாகச் சேவை ஆற்ற உடன் தேவைப்படுகின்றார்கள். முன்அனுபவமுள்ளவர்களுக்கும், பொலிஸ் மற்றும் வேறு நிறுவனங்களில் கடமையாற்றி ஓய்வுபெற்றவர்களுக்கும் பருத்தித்துறை நகருக்கு அண்மையில் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

சகல விவரங்களுடன் நாளை (26.09.2002) வியாழன் காலை 10.00 மணிக்கு கீழ்வரும் விலாசத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு நேரில் வரவும்.

**கஜமுகன் தொலைத் தொடர்பு நிலையம்**
முதலாம் கட்டை, இல. 125, மெயின் வீதி,
பருத்தித்துறை.

(8710)

## தரம் 5 புலமைப்பரிசில் வகுப்புகள் - 2003

### ஞானக் குழந்தை கல்விக் கழகம்

சிவன் வீதி, திருநெல்வேலி

ஆரம்பம்:- 28.01.2002 சனிக்கிழமை பி.ப. 3.00மணி

ஆசிரியர்:- திரு.வே.அன்பழகன்

பெற்றோர்கள் வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் அனுமதி விண்ணப்பங்களைப் பெற்று மேலதிக விவரங்களை அறிந்துகொள்ளவும்.

(8708) செ.ஜெயபாலசிங்கம்
நிர்வாகி


## பங்குத் தந்தை நியமனம்

குருநகர்,செப்.25

யாழ்.மரியன்னை பேராலயத்தின் பங்குத்தந்தையாக அருட்திரு.மைக்கல் சௌந்தரநாயகம் அடிகளார் யாழ்.ஆயரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆலயத்தின் உதவிப் பங்குக் குருவாக இறைபணிபுரிந்த வண.பிதா ஜோதிநாதர் அடிகள் கிளிநொச்சி ஜெயபுரப் பங்கிற்கு இறைபணிபுரிய அனுப்பப்பட்டுள்ளார்.(ஓ-51)

## முதியோர், சிறுவர் தின விழா

கரவெட்டி பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும்.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரைவேற்பிள்ளை, போரூட் நிறுவனத்தின் பதில் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் என்.கோகுலதாஸ் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வார்கள்.

விழாவை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். சிறுவர், முதியோர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தலும் இடம்பெறும். (ஐ-173)

## இன்றைய.....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏசியன் விளையாட்டுக் கழகம் அமரர் 'கமல்ஸ்ரெனிஸ்' ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சிங்கள மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும், அன்னை வேளாங்கன்னி விளையாட்டுக் கழகமும் பங்குபற்றுகின்றன. (ஐ-ரி)

★ ★ ★

தீவக கல்வி வலய பாடசாலை அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள 18 வயதுப் பிரிவினர்க்கிடையேயான அரையிறுதி ஆட்டத்தில் காரைநகர் கலாநிதி தியாகராசா மகாவித்தியாலய அணியும் வேலணை துரைச்சாமி மகாவித்தியாலய அணியும் மோதுகின்றன. இந்த ஆட்டங்களைத் தொடர்ந்து 3 ஆம் இடத்துக்கான ஆட்டமும் இறுதிப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன. (ஐ-86)


எமது புதிய வீடியோ CD வெளியீடு

சத்தியராஜ்ஜின்
**மாறன்**
ஒறிஜினல் V.C.D 350/=
பதிவு செய்யப்பட்ட C.D 300/=
(புதிய படப் போஸ்ரர்கள் வந்துள்ளன)
**I.T.N**
பலாலி வீதி, யாழ்ப்பாணம். (C-23958)

**லக்ஷ்மி** இணுவில்.
விக்ரம். கிரண். மனோரமா நடித்த
**ஜெமினி**
(கலர்)
காட்சிகள்: 10.15, 2.30, 6.30 (ப.நே.) (8707)

**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜயகாந் (இருவேடம்), பிரபுதேவா, லிவிங்ஸ்டன், மீனா, கௌசல்யா நடித்த
**வானத்தைப் போல**
(கலர்)
காட்சிகள்: 11.00, 3.00 (ப.நே.) (8697)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
அர்ஜுன், சாக்ஷி, கவுண்டமணி நடித்த
**வேகம்** (கலர்)
காட்சிகள்: 11.00, 2.30, 6.00 (புதியநேரம்) (C-23959)

**ராஜா** யாழ்ப்பாணம்.
இன்று முதல்
அஜித், சாலினி, நாசர் நடித்த
**அமர்க்களம்**
காட்சிகள்: 11.30, 2.30, 6.30


## நாரந்தனை தாக்குதல் சம்பவம்:

# சாட்சிகளுக்கு நீதிமன்றம் அழைப்பாணை; பிடியாணை!

யாழ்ப்பாணம்,செப்.25

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி தமிழ்க் கூட்டமைப்புப் பிரமுகர்கள்மீது நாரந்தனையில் வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான வழக்கின் சாட்சிகள் எவரும் நேற்று மன்றுக்குச் சமுகமளிக்காத காரணத்தினால் வழக்கு விசாரணை அடுத்த மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மேற்படி சம்பவம் தொடர்பான வழக்கு யாழ்.நீதிமன்றில் எடுக்கப்பட்டபோது எதிரிகளான யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி. உறுப்பினருமாகிய ந.மதனராஜா, வேலணைப் பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பி. உறுப்பினருமாகிய ந.கருணாகரகுருமூர்த்தி, ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஜீவன் ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர். ஆயினும், சாட்சிகள் எவரும் ஆஜராகாததை அடுத்து வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைத்த யாழ்.நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ச.இளங்கோவன், 2ஆம், 3ஆம், 4ஆம், 12ஆம் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்புமாறு பணித்தார். அத்துடன் 7ஆம், 29ஆம் சாட்சிகளுக்கு பிடியாணையும் பிறப்பித்துள்ளார்.(ஐ-10-ரி)

# நல்லூரில் ஆசிரியரின் வீட்டில் அடுத்தடுத்துத் திருட்டுக்கள்!

யாழ்ப்பாணம்,செப்.25

நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள ஆசிரியர் ஒருவரது வீட்டில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு நீர் இறைக்கும் இயந்திரம் திருடப்பட்டிருக்கிறது.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் பணிபுரியும் ரவீந்திரன் என்பவரின் வீட்டிலேயே இத்திருட்டு நடைபெற்றிருக்கிறது. இந்த வீட்டில் இருந்து கடந்த 14ஆம் திகதி சைக்கிள் ஒன்று திருடப்பட்டது.

நல்லூர், கல்வியங்காடு பகுதிகளில் அண்மைக்காலமாக இத்தகைய திருட்டுக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

பிச்சைக்காரர்கள் போன்று பகலில் வீடுகளுக்கு வந்து நோட்டமிடுவோர் சிலரே இரவில் திருட்டுக்களில் ஈடுபடுவதாக மக்கள் சந்தேகிக்கின்றனர்.

சில வீடுகளில் இரவு வேளைகளில் இனந்தெரியாதோரின் நடமாட்டங்களும் அவதானிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை -

திருட்டு, வழிப்பறி சம்பவங்கள் குடாநாட்டில் பரவலாக அதிகரித்துள்ளதாக பிரதேச செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-ரி-12)

## நோர்வே பேராசிரியரின் கருத்துரை

யாழ்.பல்கலைக்கழக இளம் பொருளியலாளர் மன்றத்தின் ஏற்பாட்டில் 'சமாதானம் - அபிவிருத்தி - இடைக்காலம் ஆகியவை பற்றிய நோக்கு' என்ற தலைப்பில் நோர்வே, ஒஸ்லோ பல்கலைக்கழகப் பேராசிரியர் என்.சண்முகரத்தினம் இன்று புதன்கிழமை கருத்துரை வழங்குகிறார்.

புவியியல்துறை மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு இக்கருத்துரை இடம்பெறும். (ஓ)


## தேவை

அலுவலக இடவசதி

முன்னணி நிறுவனத்துவ நிறுவனமொன்றுக்கு யாழ்ப்பாண வர்த்தகப் பகுதிக்குள் பிரபல்யமான மையத்தில் 750 - 1200 சதுர அடி விஸ்தீரணமுடைய கட்டடத் தொகுதியொன்று தேவைப்படுகிறது.

தொடர்பு:
த.பெ.இலக்கம் 1800,
கொழும்பு. (C-23955)

## தேவை

★ அலுவலக உதவியாளர் (ஆண்/பெண்)
★ அலுவலக உத்தியோகத்தர் (ஆண்/பெண்)
★ வெளிக்கள உத்தியோகத்தர் (ஆண்/பெண்)
★ வெளிக்கள உதவியாளர் (ஆண்/பெண்)
★ புக் பைண்டிங் (பெண்)

ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 26.09.2002 இற்கு முன் விண்ணப்பங்களைப் பதிவு செய்யவும்.

வித்து மாணவர் சஞ்சிகை,
56பருத்தித்துறை வீதி,
(8706) நல்லூர்.

## WORKSHOP

An English Language Teaching Workshop (for Primary/Secondary English teachers) will be held at St.John's College, Jaffna from 12.00 to 3.00 p.m. on 25th September, 2002.

The workshop will be conducted by the Co-Project Coordinators of the primary English Language Project with the assistance of staff from Regional English Support Cent - res (RECSs). Please bring the Pupil's books, work books and Teachers Guides.

**S.Sivaraja**
(8712) Additional Provincial Director of Education, Jaffna.


## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் துரைசிங்கம்

(முன்னாள் முகாமையாளர், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்)

மட்டுவில் மத்தி, சிவன் கோவிலடியைச் சேர்ந்த பொன்னம்பலம் துரைசிங்கம் அவர்கள் நேற்று(24.09.2002)செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவராவார். இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சிவன் கோவிலடி,
மட்டுவில் மத்தி, மட்டுவில். (8713)

தகவல்:
மனைவி.

### பொன்னம்பலம் நடராசா

(முன்னாள் யாழ்.மாநகரசபை வரி அறவீட்டாளர்)

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும், தென்னிந்தியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நடராசா அவர்கள் நேற்று(24.09.2002) செவ்வாய்க்கிழமை தென்னிந்தியா, திருச்சியில் காலமானார்.

அன்னார் பத்மாவதியின் அன்புக் கணவரும், மோகன் (நோர்வே), திருமதி மோகனா கருணாநிதி (இந்தியா - ஓய்வுபெற்ற லிகிதர், ஓய்வு, தியத் திணைக்களம், கச்சேரி, யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற மோகனதாஸ், மோகனச்சந்திரன் (நோர்வே), திருமதி அருந்ததி லோகநாதன் (டென்மார்க்), பாஸ்கரன் (சுவிஸ்), திருமதி சுசீலாதேவி கிரிதரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2002) புதன்கிழமை காலை 7.00 மணிக்கு தென்னிந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தொ.பே.இல.0091-431-351396
இல.46,பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (8711)

தகவல்:
பா.லோகநாதன்.

# முஸ்லிம்களுக்கு தனி அலகு கேட்டு வற்புறுத்தமாட்டாராம் ஹக்கீம்!

கொழும்பு,செப்.25

தென்கிழக்கில் முஸ்லிம் மக்களுக்குத் தனியான அலகு ஒன்றை உடனடியாகக் கோரி வற்புறுத்தப் போவதில்லை என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கூறுகிறார்.

முஸ்லிம் மக்களின் தனித்துவத்தை அரசும் புலிகளும் அங்கீகரித்துள்ளன. இக்கட்டத்தில் தனியான அலகு கோரி சமாதான பேச்சுக்களைக் கொச்சைப்படுத்த நான் விரும்பவில்லை என்றும் அவர் சொன்னார்.

கொழும்பில் தனது அமைச்சில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைச் சொன்னார்.

இலங்கையில் நடைபெறவிருக்கும் இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு தொடர்பாக விளக்கமளிக்க இப்பத்திரிகையாளர் மாநாடு நடத்தப்பட்டது.

தாய்லாந்துப் பேச்சின் போது முஸ்லிம் மக்களுக்கான தனி அலகு பற்றிய உங்கள் கோரிக்கையை முன்வைத்தீர்களா? என்று ஒரு செய்தியாளர் வினவினார்.

அப்பொழுது மேற்கண்டவாறு பதிலளித்த அமைச்சர் ஹக்கீம் மேலும் கூறுகையில், நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதே அரசு - புலிகள் பேச்சின் அடிப்படை நோக்கமாகும். இந்த நிலையில் தனி அலகு கோர நான் விரும்பவில்லை - என்றார்.

அதிகாரப் பரவலாக்கல் குறித்து பேச்சுக்களில் ஆராயப்படும் போது முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமைகள், நிர்வாகப் பிரிவு தொடர்பாக பேசித் தீர்க்கமுடியும் என்றும் அவர் கூறினார்.

"எல்லாளன்" படை என்ற பெயரில் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டிருப்பது குறித்து வினவப்பட்டபொழுது, சமாதானப் பேச்சு நடைபெறுகையில் இவ்வாறு விஷமத்தனமான செயல்களில் ஈடுபடுவது வேதனைக்குரியது. இது சமாதானத்துக்கு எதிரான தீய சக்திகளின் செயல் என்றும் அமைச்சர் ஹக்கீம் குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளுக்கு உதவி கோருவதில் அரசும் புலிகளும் மட்டுமின்றி முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று பிரதமரை சந்தித்து கோரவிருப்பதாகவும் அவர் சொன்னார். (ஐ-12)

## குடாநாடு முழுவதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்வுகளில் சகல துறை சார்ந்தவர்களையும் கலந்துகொண்டு தியாகி திலீபனின் பெருமையைப் பேணுமாறு யாழ்ப்பாணம், நல்லூர் பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

இதேவேளை -

திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்தி வடமராட்சியில் நேற்று பவனி வந்தது.

வதிரியில் உள்ள அரசியல்துறை அலுவலகத்தில் இருந்து புறப்பட்ட ஊர்தி நெல்லியடி,மந்திகை, பருத்தித்துறை, வியாபாரி மூலை, பொலிகண்டி வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளுக்குச் சென்றது.

ஊர்தி சென்ற வீதிகளில் கூடிநின்று மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

நாவாந்துறை சந்தை முன்பாக அமைக்கப்பட்டுள்ள நினைவுப்பந்தலில் இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை உண்ணாவிரதம் இடம்பெறவுள்ளது.

நாவாந்துறை, கொட்டடிப் பகுதிகளில் பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த உண்ணாவிரதம் இடம்பெறுகின்றது.

நாவாந்துறைப் பகுதியில் உள்ள சந்தை மற்றும் கடைகளை மூடி இந்த உண்ணாவிரதத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

காரைநகர், மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய முன்றிலில் நாளை முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை உண்ணாவிரத நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்நகர மத்தியில் திலீபனின் உருவப்படம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. வாடகைக்கார் உரிமையாளர் சங்கம், மினிபஸ் உரிமையாளர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் பங்குகொண்டனர்.

திலீபனின் நினைவு தினத்தை ஒட்டி குடாநாட்டின் சகல பகுதிகளிலும் மஞ்சள், சிவப்பு வர்ணக்கொடிகளும் வாழைகளும் கட்டப்பட்டிருந்தன. வாகனங்களிலும் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.(ஐ-3-15-17-51-173-73)

## யாழ். - கண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டார்.

வீதியை 24 மணி நேரமும் திறந்து வைப்பதில் உள்ள சிரமங்களைப் பாதுகாப்பு அதிகாரிகள் கூட்டத்தில் விளக்கிக் கூறினர். மின்சார வசதியின்மை, இரவில் வாகனங்களைச் சோதனையிட வசதியின்மை, வேறு பொது வசதிகள் இன்மை ஆகிய காரணங்களை அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் சேவையை 24 மணி நேரமும் பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமம் குறித்தும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இவற்றையடுத்து ஓமந்தை முதல் முகமாலை வரையிலுள்ள சோதனைச் சாவடிகளின் வசதிகளைப் பெருக்க நடவடிக்கை எடுப்பதென அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதனால், ஏ-9 வீதியை 24 மணி நேரமும் திறந்துவைக்கும் திட்டம் இன்று ஆரம்பமாகாது எனத் தெரிகிறது.

இதேவேளை -

கண்டி வீதி ஊடான போக்குவரத்தை முழுநாளும் அனுமதிப்பது தொடர்பாக இராணுவம் - புலிகள் எந்தத்தரப்பிலிருந்தும் இதுவரை தம்மிடம் வேண்டுகோள் எதுவும் விடுக்கப்படவில்லை என்று செஞ்சிலுவைச சர்வதேசக் குழுவின் யாழ்.வதிவிட அதிகாரி சிசிலி குறொஸ் உதயனுக்குத் தெரிவித்தார்.

24 மணிநேரமும் வீதியைத் திறந்து வைப்பது குறித்து இரு தரப்பும் கேட்டுக்கொண்டால் செஞ்சிலுவைக் குழு அதற்கான வசதிகளைச் செய்யும். அதுவரை தற்போதுள்ள நடைமுறையே பின்பற்றப்படும்.

- என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-3)

## போராளிகள் சென்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யல் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டிருக்கிறார்.

நேற்றைய சம்பவம் தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

பாப்பா தலைமையில் அரசியல் பணிகளை மேற்கொள்வதற்கு போராளிகள் குழு ஒன்று வாகனத்தில் நேற்று மாலை 4 மணிக்குத் தீவகம் நோக்கி புறப்பட்டுச் சென்றது. அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியில் சோதனைக்காக அவர்கள் தரித்துநின்ற சமயம் அங்கு பணியில் இருந்த கடற்படையினர் அவர்களது வாகனத்தை சோதனை செய்து அனுப்பாமல் நீண்ட நேரம் தரித்துநிற்க வைத்தனர்.

பின்னர் அரச திணைக்கள வாகனங்களும் பொதுமக்களின் வாகனங்களும் அங்குவந்ததால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படவே போராளிகளின் வாகனத்தைத் தீவகம் செல்லக் கடற்படையினர் அனுமதித்தனர்.

தீவகத்தில் அரசியல் பணிகளை முடித்துக் கொண்டு போராளிகள் மீண்டும் வாகனத்தில் திரும்பி யாழ்ப்பாணம்நோக்கி வந்த சமயமும் அல்லைப்பிட்டி சோதனை நிலையத்தில் கடற்படையினர் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். சுமார் ஒரு மணி நேரம் அங்கு வாகனத்தை தடுத்துவைத்திருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தீவகம் நோக்கிவந்த பஸ்ஸில் பயணம் செய்த பொதுமக்களும் அங்குவந்து கூடியவர்களும் சேர்ந்து போராளிகளின் வாகனத்தைச் செல்ல அனுமதிக்கும்படி கடற்படையினரிடம் கோரினர். அவர்கள் அதற்குச் செவிசாய்க்காது நின்றனர்.

இதையடுத்து பொதுமக்கள் ஒன்று சேர்ந்து போராளிகளின் வாகனத்தை, சோதனைச் சாவடிக்கு அருகில் உள்ள பள்ளக்காணி ஊடாகத் தள்ளிக்கொண்டு வந்து சாவடிக்கு அப்பால் விட்டனர். அதன்பிறகே போராளிகள் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர்.

இந்தச் சம்பவம் எம்மை அவமானப்படுத்தும் செயலாகக் கருதுகின்றோம். அத்துடன், எமது அரசியல் பணிகளை சுதந்திரமாக மேற்கொள்வதைத் தடுக்கும் செயலாகவும் உளளது. எனவே, இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம். கடற்படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் தொடருமானால் மக்கள் கொந்தளிப்பு தவிர்க்க முடியாததாகிவிடும் இதுபற்றி கண்காணிப்புக் குழுவுக்கு தெரிவித்துள்ளோம் - என்றார் அவர்.(ஐ-3)

## நெடுந்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாடியதை அடுத்து, கடற்படையினர் தமது முயற்சியைக் கைவிட்டு நேற்று நண்பகல் அளவில் இரு வள்ளங்களில் அங்கிருந்து சென்றனர். முகாம் அமைக்க எடுத்துவந்த பொருள்களில் ஒரு பகுதியையும் தம்முடன் எடுத்துச் சென்றனர்.

இதேவேளை, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரி ஒருவர் நேற்றுப்பிற்பகல் நெடுந்தீவுக்கு விஜயம் செய்தார்.

முகாம் அமைக்கத் தெரிவான பகுதியை நேரில் பார்வையிட்ட அவர், அரச அதிகாரிகளுடனும் பொதுமக்களுடனும் கலந்துரையாடினார்.

கடற்படைமுகாம் அமைக்கப்படமாட்டாது என்று கடற்படை தரப்பிலிருந்து தமக்கு உறுதிமொழி அளிக்கப்பட்டிருப்பதாகவும் -

நெடுந்தீவில் பொலீஸார் மட்டும் பணிபுரிவார்கள் என்றும் -

அவர் பொதுமக்களிடம் கூறினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடற்படைமுகாம் அமைக்கப்படுவதைக் கண்டித்து தாங்கள் வெகுஜனப் போராட்டம் ஒன்றை நடத்த முடிவு செய்திருந்ததாகவும் -

முகாம் அமைக்கும் முயற்சியை படையினர் நிறுத்தி விட்டதால் போராட்டத்தைத் தாங்கள் கைவிடுவதாகவும் -

பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## 14 நாள்களாகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றது.

அதையடுத்து, பொலீஸ்மா அதிபர் பதவிக்கு ஆனந்தராஜாவின் பெயரை அரசமைப்புச் சபைக்கு ஜனாதிபதி சிபாரிசு செய்தார். அதை ஆட்சேபித்து சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபரான எச்.எம்.ஜி.பி. கொடடக தெனியவும் வேறு சிலரும் முறைப்பாடுகளைத் தெரிவித்தனர். பொலீஸ்மா அதிபர் நியமனத்தில் தனக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக கொட்டகதெனிய முறையிட்டிருந்தார்.

அவற்றை ஆராய்ந்த அரசமைப்புச சபை, ஜனாதிபதியின் சிபாரிசை மீளபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொண்டது.

இந்த நிலையில் சில நாள்களுக்கு முன் கொட்டகதெனிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். அதனால் அவரது பெயரை பொலீஸ்மா அதிபர் பதவிக்கு இப்பொழுது சிபாரிசு செய்தால் சட்டப்பிரச்சினை ஏற்படுமா, இல்லையா? என்பது குறித்து ஆராயப்படுவதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஐ)


பௌதிகவியல்
A/L 2003
காந்தப்புலம்
ஆரம்பம்: 27.09.2002
வெள்ளி 6.00 - 7.00 (a.m.)
திரு.M.கருணாநிதி (B.Sc.(Spl.)
NIRU TUITION CENTRE
(8663) Kondavil.

எமது புதிய வீடியோ
CD வெளியீடு
சத்தியராஜ்ஜின்
மாறன்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C-1899)




FUJIFILM
யாழ்.மாவட்டத்திற்கு
விநியோகஸ்தர் தேவை

இலங்கையின் தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றான ஹேலீஸ் (Hayleys) நிறுவனத்தினர் கீழ்வரும் பொருள்களைச் சந்தைப்படுத்த தகுதிவாய்ந்த விநியோகஸ்தரை எதிர்பார்க்கின்றனர்.

- பியூஜி பிலிம் (FUJI FILM)
- கமரா (CAMERA)
- அல்பம் (ALBUM)
- பட்டரிகள் (BATTERIES)

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமை உடையவர்களாக இருத்தல் அவசியம்.

- போதுமான களஞ்சிய வசதி
- வங்கி உத்தரவாதம்
- பொருள்களை சந்தைப்படுத்துவதற்கான வாகன வசதி

உங்கள் விண்ணப்பங்களை 05.10.2002இற்கு முன்னதாக அனுப்பவும்.

Business Unit Manager,
Photo Imaging Dept.,
Hayleys Consumer Products Ltd.,
25, Foster Lane,
Colombo - 10.

077-328463
077-360490
01-699091

(8558)

திறமையைப் பாராட்டுகின்றோம்



அல்லைப்பிட்டி.

2002-AUG. மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய மாணவன் செல்வன் இ.ராஜ்பாரதி (புள்ளி 126, நிலை 488) அவர்களையும், சித்திப் புள்ளியை அணுகிய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம். (8709)

HOTEL SEIVAMS
தலைநகரில் கடந்த 16 வருடங்களாக
மிகவும் சிறந்த சேவை செய்யும் ஒரே ஸ்தாபனம்
ஹோட்டல் சீவம்ஸ்
01. தனி அறை (Single Room)
02. இருவர் அறை (Double Room)
மிகவும் சகாயமான கட்டணத்தில் வாடகைக்குக் கிடைக்கும்.
இன்றே விஜயம் செய்யுங்கள்:
HOTEL SEIVAMS
Guest House,
93, Vivekananda Hill, Colombo - 13.
Telephone: 326522, 334829
(8589)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.09.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.